Registered as a NewsPaper

விலை ரூபா 7.00

# ஈழநாதம்

EELANATHAM மக்கள் நாளிதழ்

பக்கங்கள் ~ 08

நாதம் 14 | திருவள்ளுவர் ஆண்டு 2034 | வைகாசி - 07 | 21-05-2003 | புதன்கிழமை | ஓசை 92

வவுனியா ஒப்டிக்கல்
Vavuniya Optical
கண் பரிசோதிக்கப்பட்டு மூக்குக் கண்ணாடி 1/2 மணித்தியாலத்தில் பெற்றுக் கொள்ளலாம். உங்கள் வைத்திய துண்டுகளுக்கும் உடன் கண்ணாடி வழங்கப்படும்.
வவுனியா ஒப்டிக்கல்,
30 பஸ் நிலையம்,
வவுனியா. (சீ-7864)

## — கெல்ஹேசன் சமர்ப்பித்த அரசின் கடிதத்திற்கு —

# புலிகளின் பதில் கடிதம் இன்று அரசிற்கு அனுப்பப்படும்

## புலிகள் வட்டாரங்கள் தகவல்

(கிளிநொச்சி)

**நோர்வேயின் பிரதிவெளிவிவகார அமைச்சர் விதார் கெல்ஹேசன் ஊடாக விடுதலைப் புலிகளுக்கு பிரதமர் ரணில் அனுப்பி வைத்த கடிதத்திற்கு விடுதலைப் புலிகளினால் பதில் கடிதம் நாளை அனுப்பி வைக்கப்படவுள்ளது. இக்கடிதத்தினை விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும் தலைமைப் பேச்சாளருமான அன்ரன் பாலசிங்கம் அவர்கள் அனுப்பிவைப்பார் எனவும் தெரிய வருகின்றது.**

கடந்த சனிக்கிழமை அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன் அவர்களைச் சந்தித்து பேசிய நோர்வேயின் பிரதிவெளி விவகார அமைச்சர் விதார் கெல்ஹேசன் தற்பொழுது பேச்சுவார்த்தையில் ஏற்பட்டுள்ள முட்டுக்கட்டைகளைப் போக்கவும், டோக்கியோவில் நடைபெறவுள்ள இலங்கைக்கு உதவிவழங்கும் மாநாட்டில் விடுதலைப் புலிகளைப் பங்கேற்கச் செய்வதற்குமான ஒரு நகலத்திட்டம் அடங்கிய பிரதமர் ரணில்விக்கிரமசிங்கவின் கடிதம் ஒன்றை புலிகளிடம் கையளித்தார்.

இக்கடிதம் குறித்துத் தீவிரமாக ஆராய்ந்த பின்னா இதற்கான பதில் கடிதம் நாளை புலிகளால் பிரதமருக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளது. இக்கடிதம் பிரதமரின்

(08ம் பக்கம்பார்க்க)

## குடும்பஸ்தர் படுகாயம்

(ஒட்டுசுட்டான்)

இடியன்துவக்கு குழல் பிரிந்து வெடித்ததில் குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

நேற்று முன்தினம் காலை 10.00 மணியளவில் காட்டுக்குச் சென்ற வேளை மரமொன்றுக்கு குறி வைத்து சுட்ட சமயத்திலேயே இவ்விபத்து ஏற்பட்டது.

தலையில் காயமடைந்த இந்நபர் புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(08ம் பக்கம்பார்க்க)

## கிளி.யில் நாளை பத்திரிகையாளர் மாநாடு; புலிகள் முக்கிய முடிவுகளை வெளியிடலாம்!

தமிழீழ விடுதலைப் புலிகள் கிளிநொச்சியில் நாளை பத்திரிகையாளர் மாநாடு ஒன்றை நடத்தவுள்ளனர்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்களால் கூட்டப்படவுள்ள இந்தப் பத்திரிகையாளர் மாநாட்டில் தற்போதைய அரசியல் நிலவரம் குறித்தும் சமாதானப் பேச்சு வார்த்தை குறித்தும் டோக்கியோ மாநாட்டில் விடுதலைப் புலிகள் பங்குபற்றுவது குறித்தும் தெளிவு படுத்தப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

டோக்கியோ மாநாட்டில் விடுதலைப் புலிகள் கலந்துகொள்வதற்கு

(08ம் பக்கம்பார்க்க)

## மண்சரிவு, வெள்ளப்பெருக்கு

# தெற்கில் பலியானோர் தொகை 500 க்கும் மேலாக அதிகரிப்பு

(கொழும்பு)

தென்னிலங்கையில் இரத்தினபுரி, காலி, மாத்தறை, களுத்துறை, அம்பாந்தோட்டை மாவட்டங்களில் வெள்ளப் பெருக்கினாலும், மண்சரிவுகளினாலும் ஏற்பட்ட உயிரிழப்பு ஏற்கனவே அறிவிக்கப்பட்டதைவிட மேலும் அதிகரித்துள்ளது.

இரத்தினபுரி மாவட்டத்தில் 115 சடலங்கள் மீட்கப்பட்டுள்ளதோடு உயிரிழந்தோர் எண்ணிக்கை 230 ஆக

(8ம் பக்கம் பார்க்க)

## ராணுவத்தின் வீதி வேகத்தடையினால் தனியார் பேருந்து குடை சாய்ந்தது

### - அல்லைப்பிட்டியில் இருவர் பலி ;10பேர் காயம்!

(வடமராட்சி)

புங்குடுதீவில் இருந்து யாழ்நகர் நோக்கி பயணிகளுடன் பயணித்துக் கொண்டிருந்த தனியார் பேருந்து ஒன்று விபத்துக்குள்ளானதில் இருவர் கொல்லப்பட்டுள்ளனர்.

அல்லைப்பிட்டியில் இராணுவம் வீதிக்குக் குறுக்காக அமைந்திருந்த வீதி வேகத்த தடையை கடக்க முற்பட்ட போது வாகனம் சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து, அருகில் இருந்த வயலில் தடம்புரண்டது.

இவ்வாறு தடம்புரண்டபோதே

(8ம் பக்கம் பார்க்க)

## பெற்றோலின் விலை நள்ளிரவு முதல் இரண்டு ரூபாவால் குறைப்பு

நேற்று நள்ளிரவு முதல் பெற்றோல், சுப்பர் பெற்றோல் ஆகியவற்றின் விலை லீற்றருக்கு இரண்டு ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளதாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது.

டீசல் மற்றும் மண்ணெண்ணெய் விலையில் எம்மாற்றமும் செய்யப்படவில்லை. எனினும் சகல வகைகளையும் சேர்ந்த உராய்வு எண்ணெயின் விலை 02 ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## புலிகளின் நடமாடும் மருத்துவசேவை 10 ஆண்டுகளைப் பூர்த்தி செய்தது

தமிழீழ விடுதலைப்புலிகளின் நடமாடும் மருத்துவசேவை தனது 10 ஆண்டு சேவையை பூர்த்திசெய்து இன்று பதினோராவது ஆண்டில் காலடிவைக்கிறது. நடமாடும் மருத்துவசேவை 1993ஆம் ஆண்டு மே மாதம் 21ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது.

சிறிலங்கா அரசின் தீவிர மருந்துத் தடை நிலவிய காலத்தில் இம்மருத்துவ சேவை மக்களுக்குப் பெரிதும் உதவி வந்தது பிரதேசத்தில் மலேரியா, நெருப்புக்காய்ச்சல், "கொலரா" ஆட்கொல்லி நோய்த்தடுப்பு

(8ம் பக்கம் பார்க்க)

## வலி. வடக்கு மக்களின் மறியலால் யாழ். அரச செயலகம் செயலிழந்தது

வலி.வடக்குப் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்த மக்களைச் சொந்த இடங்களில் மீளக்குடியமர அனுமதிக்கக் கோரி நேற்று யாழ். அரச செயலகம் முன் நடத்திய மறியலினால் செயலகத்தின் பணிகள் ஸ்தம்பிதமடைந்தன.யாழ். மாவட்டச் செயலகம் முன்பாக ஆயிரக்கணக்கான ஆண்கள், பெண்கள் இந்த மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.



இப்போராட்டம் காரணமாக செயலகம் நண்பகல் 12.00 மணிவரை முற்றாக ஸ்தம்பிதமடைந்திருந்தது. செயலக ஊழியர்கள் செயலக வளவிற்குள் உட்புகவிடாமல் மக்கள் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இதேவேளை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த மக்களை சிறிலங்கா இராணுவத்தினர் பவள் கவச வாகனத்தில் சென்று வீடியோ எடுத்தனர். மறியல் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தோர் "புரிந்துணர்வு ஒப்பந்தம் யாருக்காக எழுதப்பட்டது". "ஒப்பந்தத்தில் உள்ளவற்றை அரசே உடன் அமுல் செய்". "சதீஸ் நம்பியாரைக்

(8ம் பக்கம் பார்க்க)

## வர்த்தமானி பிரகடனம் வெளியிடுவதில் இழுபறி

அபிவிருத்தி சபை தொடர்பான சிறிலங்கா சனாதிபதியின் பிரகடனத்தை அரசாங்க வர்த்தமானியில் வெளியிடுவது குறித்து இழுபறி நிலை தொடர்ந்து வருகிறது.சனாதிபதியின் பிரகடனம் வெளியிடப்பட்டு 13 நாட்களாகியும்

(8ம் பக்கம் பார்க்க)

## வீரவணக்கம்

12.05.2003 அன்று திருமலை சம்பூர் பகுதியில் தவறுதலாக ஏற்பட்ட வெடிவிபத்தின்போது போராளி ஒருவர் சாவடைந்துள்ளார்.

2.ஆம் லெப் குணாளன் (சிவராசா சந்திரநேசன் யாழ்.தற்காலிக முகவரி 792, பாடசாலைவீதி, செல்வநாயகபுரம் உப்புவெளி-திருமலை) என்ற போராளியே சாவடைந்தவராகும்.

இவருக்குத் தமிழீழ விடுதலைப் புலிகள் வீர வணக்கத்தைத் தெரிவித்துள்ளனர்.

# புலிகள்-தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் டோக்கியோ மாநாடு குறித்து தீவிர ஆராய்வு

(அலுவலக செய்தியாளர்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்று தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வனைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

டோக்கியோ மாநாட்டில் விடுதலைப் புலிகள் கலந்துகொள்வது தொடர்பாக கலந்துரையாடப்பட்டதாக கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களில் ஒருவரான இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி சமாதான செயலகத்தில் நேற்றுக் காலை 11.15மணிக்கு ஆரம்பமான இச் சந்திப்பு இரண்டு மணிநேரம் வரை நீடித்தது. இச்சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களான இரா.சம்பந்தன், கஜேந்திரகுமார், ஜோசப் பராராஜசிங்கம், ரவிராஜ், சுரேஸ் பிறேமச்சந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர். இவர்களைத் தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன், துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன், சமாதான செயலகப்

(8ம் பக்கம் பார்க்க)

care

# VACANCY

CARE INTERNATIONAL- SRI LANKA, the world's largest International Non-Government Organization wishes to recruit energetic and self-motivated people with lots of new ideas to be part of our high-energy team of development professionals to rebuild livelihoods and effect sustainable improvements in the lives of resettling families in the Wanni region.

The end result of the project will be the Increased availability of water for drinking and domestic use, access to reliable supplies of domestic water that is safe, sufficient and acceptable, increased access to sanitation facilities, Increase in the land area under cultivation and increase in yield and Increased access to fishing activities.

The following vacancies exist and applications are invited from residents of Wanni/Jaffna districts.

1. **Project Coordinator**
2. **Field Officers**
3. **Finance and Administration Officer**
4. **Field Assistance**
5. **Drivers/Administrative assistant**

All positions are of nine months duration and Suitably qualified candidates with a minimum of one years hands on experience in development work are encouraged to hand over the applications to CARE office in Puthukkudiyiruppu within a weeks time.

All positions are field based in Wanni and carry an attractive salary together with the usual CARE fringe benefits.

Positions one to four will require strong analytical, facilitation skills and computer literacy. Fluency in English will be an advantage. Appointments are on contract basis.

Women are encouraged to apply.

CARE is an equal opportunity employer.

Director Human Resources.

**CARE INTERNATIONAL-SRI LANKA.**
**7/A, Gregory's Road,**
**Colombo-7.**
**Email: Pki@Care.lk.**

(சி-8117)

## கிளிநொச்சி மாவட்ட சுகாதார திணைக்களத்தில் உள்ள சாரதிகளுக்குரிய வெற்றிடங்களை நிரப்பும் பொருட்டு ஒப்பந்த அடிப்படையில் சாரதிகளை ஆட்சேர்த்தல்

17.05.2003 ஆம் திகதியில் நடைபெறவிருந்த மேற்படி நேர்முகப்பரீட்சை எதிர்வரும் 24.05.2003 (சனிக்கிழமை) காலை 9.00 மணியளவில் கிளிநொச்சி பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனையில் நடைபெறவுள்ளது. கீழ்க் குறிப்பிடப்படும் தகைமைகள் உடையவர்கள் அவற்றுக்குரிய மூலப்பிரதிகளுடன் ஒவ்வொரு நிழற்படப்பிரதிகளையும் கொண்டு நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றும் வண்ணம் வேண்டப்படுகின்றீர்கள்.

01) 03 வருடத்திற்குக் குறையாத சாரதியத்திற்கான அனுபவம்.
02) சாரதி அனுமதிப்பத்திரம் வைத்திருத்தல்.
03) வயதெல்லை:- 20 தொடக்கம் 45 வரை
04) கல்வித்தகமை:- 08ஆம் தரம் சித்தியடைந்திருத்தல்
05) வதிவிட அத்தாட்சிப்பத்திரம்
06) பிறப்பு அத்தாட்சிப்பத்திரம்
07) தேசிய அடையாள அட்டை
08) நற்சான்றிதழ்

**வைத்திய கலாநிதி த.சத்தியமூர்த்தி,**
**மா.சு.சே. பி.பணிப்பாளர்,**
**கிளிநொச்சி.**

(சி.8118)

# துயர் பகிர்கின்றோம்

எமது பாடசாலையின் ஆசிரியை திருமதி சு.சுகந்தினி அவர்களின் துணைவர் திரு.கி.சுரேந்திரனின் மறைவுச் செய்திகேட்டு அதிர்ச்சியடைந்தோம். இவரது மறைவால் துயருறும் அவரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

*அதிபர், ஆசிரியர்கள்,*
*மாணவர்கள், ஊழியர்கள்.*
*கிளி/முருகானந்த ம.வி.*

(3273)

# ஆனி மாத பருவகாலச் சீட்டு வழங்கல்

## தமிழீழப் போக்குவரவுக் கழகம்

தமிழீழப் போக்குவரவுக் கழகத்தினால் வழங்கப்படும் பருவகாலச்சீட்டு கீழ்க்காணும் இடங்களில் 26.05.2003 - 31.05.2003 வரை வழங்கப்படும் என்பதையும், அடுத்துவரும் மாதங்களில் இதே போல் இந்த இடங்களில் வழங்கப்படும் என்பதையும் அறியத்தருகின்றோம்.


- ☐ முல்லைத்தீவு பேருந்து நிலையம்,
- ☐ முகமாலைப் பேருந்து நிலையம்,
- ☐ பூநகரி மகாவித்தியாலயம் (26,27ஆம் நாள் மட்டும்)
- ☐ புதுக்குடியிருப்பு தமிழீழப் போக்குவரவுக் கழகம் முல்லைச்சாலை,
- ☐ கிளிநொச்சி தமிழீழப் போக்குவரவுக்கழகம் கிளி/சாலை,

கல்வி கற்கும் மாணவர்களுக்கு கல்வி கற்கும் பாடசாலையில் வழங்கப்படும்



முகாமையாளர்,
தமிழீழப்
போக்குவரவுக்கழகம்,
நடுவப்பணிமனை
விசுவமடு.

(சி.8120)



## செம்பியன்பற்று புனித பிலிப்நேரியார் திருநாளுக்கு

# சிறப்புப் பேருந்துப் பணி

## தமிழீழப் போக்குவரவுக் கழகம்




செம்பியன் பற்று புனித பிலிப் நேரியார் திருநாள் 26.05.2003 ஆம் நாள் நடைபெறும். இத்திருநாளை முன்னிட்டு 25.05.2003ஆம் நாள் பகல் 12.30 மணிக்கு முல்லைத்தீவிலிருந்து மாத்தளன், புதுக்குடியிருப்பு, விசுவமடு, பரந்தன் ஊடாக , செம்பியன் பற்று கோயிலுக்கு சிறப்புப் பேருந்துப் பணி நடைபெறும் என்பதையும் இப்பேருந்து மறுநாள், 26ஆம் நாள் திருநாள் முடிந்ததும் அதே வழித்தடத்தினூடாக முல்லைத்தீவு வந்தடையும் என்பதை தெரிவித்துக்கொள்கின் றோம்.

கிளிநொச்சி, முகமாலை ஆகிய இடங்களிலிருந்தும் செம்பியன் பற்று புனித பிலிப் நேரியார் ஆலயத்திற்கு மக்கள் வருவதற்கு பேருந்து ஒழுங்கு படுத்தப்பட்டுள்ளது.

முகாமையாளர்,
தமிழீழப் போக்குவரவுக் கழகம்,
நடுவப்பணிமனை,
விசுவமடு.

(சி.8119)

# பலஸ்தீனத்தின் எல்லைகள் மூடப்பட்டதால் ஐ.நா.மனிதாபிமானப் பணிகள் பாதிப்பு!

இஸ்ரேல் முக்கிய எல்லை வாயிலைத் திறக்காது விட்டால் காசாப் பகுதிக்கான மனிதாபிமானப் பணிகளை நிறுத்த நேரிடும் என ஐக்கிய நாடுகள் சபை எச்சரித்துள்ளது.

மத்திய கிழக்கு சமாதான நடைமுறைகளுக்கான விசேட ஐ.நா.தூதுவர் இவ்வாறு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

காசாப் பள்ளத்தாக்கில் உள்ள 'ஏதென்ஸ்'என்ற இடத்தை இஸ்ரேல் மூடி இருந்தது. இதனால் ஐக்கிய நாடுகள் சபையின் நிவாரணப் பணியாளர்கள் எல்லைக்கு இரு மருங்கிலும் தத்தளிக்க நேர்ந்தது.

இது குறித்து இஸ்ரேலிய அதிகாரிகளுடன் பேசத் திட்டமிட்டிருப்பதாக ஐ.நா. தூதுவர் தெரிவித்துள்ளார்.

இஸ்ரேலியர்களுக்கு எதிராகத் தொடர்ச்சியாகப் பல தாக்குதல்கள் இடம்பெற்றதைத் தொடர்ந்து இஸ்ரேல் பலஸ்தீனத்துடனான அதன் எல்லைகளை மூடியமை தெரிந்ததே.



மேற்குக்கரை கெர்போன் நகரில் இஸ்ரேலிய இராணுவத்தால் நிர்மூலமாக்கப்பட்ட வீடொன்றின் இடிபாடுகள் மேல் நிற்கும் பலஸ்தீன சிறுவன்.

# காலவரையறையற்ற யுத்தமொன்றிற்கு ஆர்ஷே தீவிரவாத அமைப்பு தயார்!

## – 2ஆவது நாளாகவும் கடும் மோதல்

**இந்தோனேசிய அரச படைகளும் ஆர்ஷே மாகாண தீவிரவாதிகளும் நீண்ட யுத்தமொன்றுக்கான தயார்படுத்தல்களில் இறங்கியுள்ளனர். காலவரையறையற்ற யுத்தத்திற்கு தாங்களும் தயார் என ஆர்ஷே மாகாண தீவிரவாத அமைப்பின் தலைவர் மகமுத் மாலிக் அறிவித்துள்ளார்.**

டோக்கியோவில் நடைபெறவிருந்த சமாதானப் பேச்சுக்கள் முறிவடைந்த நிலையில் இராணுவ நடவடிக்கைக்கான உத்தரவை இந்தோனேசிய சனாதிபதி சுகர்னோ புத்திரி வழங்கியிருந்தார்.இதனையடுத்து படையினர் தீவிரவாதிகள் நிலைகொண்டுள்ள பகுதிகளை நோக்கி நேற்று இரண்டாவது நாளாக நகர்வு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

இந்நிலையில் இருதரப்பினருக்கும் இடையில் பலத்த மோதல்கள் நேற்றும் இடம்பெற்றதாக அறிவிக்கப்படுகிறது.

தீவிரவாதிகள் சரணடையும் வரை தாக்குதல்கள் தொடரும் என படைத்தரப்பு அறிவித்துள்ளது. முன்னதாக இராணுவ நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும் தருணத்தில் ஆயுதங்களை ஒப்படைந்து சரணடையுமாறு இந்தோனேசிய அரசு பகிரங்க அறிவிப்பும் விடுத்திருந்தது.

எனினும், நீண்ட யுத்தமொன்றை சந்திப்பதற்குத் தயார் என தீவிரவாத அமைப்பின் தலைவர் அறிவித்துள்ளமை இப்பிராந்தியத்தில் கடும் மோதல்களுக்கு கட்டியம் கூறுவதாக அமைந்துள்ளது.

இது இவ்வாறிருக்க அமெரிக்கா,அவுஸ்திரேலியா போன்ற நாடுகள் யுத்தத்தை கைவிட்டு சமாதானப் பேச்சுக்களை மீண்டும் முன்னெடுக்குமாறு இரு தரப்புக்கும் அழைப்பு விடுத்துள்ளது. எனினும் சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பதற்கான அறிகுறிகள் எதுவும் இரு தரப்பிலிருந்தும் வெளிப்பாக வில்லை எனவும் கூறப்படுகிறது.

மேலும் மோதல்களில் ஏற்பட்ட சேத விபரங்கள் குறித்த தகவல்கள் எதுவும் இதுவரை வெளியாகவில்லை.

### ஜப்பான்-சீன நல்லுறவு!

ஜப்பானிய சீனத்தலைவர்கள் சென்பிற்றர்ஸ் பேர்க்கில் இம்மாத இறுதியளவில் உச்சி மாநாடு ஒன்றை நடத்தவுள்ளனர்.

இரண்டாவது உலக மகாயுத்தத்தின் போது ஜப்பானிய இராணுவம் மிக மோசமாக நடந்து கொண்டதற்கு நினைவுச் சின்னமாக இருந்து வரும் தேவாலயம் ஒன்றுக்கு ஜப்பான் பிரதமர் விஜயம் செய்ததை அடுத்து முறுகல் நிலை மோசமடைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்க உலங்குவானூர்தி கர்பாலா நகரருகே விபத்து!

## – 4 கடற்படையினர் பலி

(பாக்தாத்)

ஈராக்கில் அமெரிக்க கடற்படைகளுக்குச்சொந்தமான உலங்குவானூர்தியொன்று வீழ்ந்து நொருங்கியுள்ளது.

அதில் பயணித்த நான்கு கடற்படையினரும் பலியாகியுள்ளனர்.

கர்பாலா நகருக்கு அண்மையில் உள்ள நீர்த்தேக்கம் ஒன்றுக்குள் இந்த உலங்குவானூர்தி வீழ்ந்துள்ளது.

பென்டகன் இந்த விபத்து குறித்த தகவல் எதனையும் வெளியிடவில்லை.

ஆனால் துப்பாக்கிப்பிரயோகம் காரணமாக அது வீழ்ந்திருக்கக் கூடிய அறிகுறிகள் தென்படவில்லை என்று கடற்படை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

# பிலிப்பைன்ஸ் படைகளுக்கு உதவியாக அமெரிக்கப் படைகள் செயலாற்றும்!

## – இரு நாட்டுத் தலைவர்கள் சந்திப்பில் இணக்கம்

(மனிலா)

பிலிப்பைன்ஸ் கிளர்ச்சியாளர்களுக்கு எதிரான போராட்டத்தில் பிலிப்பைன்ஸ் நாட்டுப் படைகளுக்கு உதவியாக அமெரிக்கப் படைகள் செயற்படும்.

தனது அமெரிக்க விஜயத்தின்போது சனாதிபதி ஜோர்ச்டபிள்யூ புஷ்சை சந்தித்த பிலிப்பைன்ஸ் சனாதிபதி இது குறித்து இணக்கப்பாட்டை எய்தியுள்ளார்.

அமெரிக்க சனாதிபதி பிலிப்பைன்சை நேட்டோவில் அங்கம் வகிக்காத பாரிய கூட்டணிநாடு என்று அறிவித்தார்.

இந்த அந்தஸ்து காரணமாக பிலிப்பைன்ஸ் அமெரிக்காவில் இருந்து போர் ஆயுதங்களைப் பெற்றுக் கொள்ளவும் பாதுகாப்பு தொடர்பான ஒத்துழைப்பைக் கோருவதற்கும் வழிபிறந்திருக்கிறது.

பிலிப்பைன்ஸ் சனாதிபதி ஈராக்கிய யுத்தத்தின் போது அமெரிக்காவைப் பெரிதும் ஆதரித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.



மருத்துவ வசதிகளற்ற பாக்தாத் வைத்தியசாலை ஒன்றில் வயிற்றுப் போக்கு நோயால் அவதியுறும் ஈராக்கிய குழந்தை.

# 4வயதுச் சிறுவனைத் தாக்கிய பெண்ணிற்கு சிறை வாழ்க்கை!

(வாஷிங்டன்)

உணவு விடுதி ஒன்றில் ஐஸ்கிறீமை கீழே கொட்டியதற்காக நான்கு வயதுச் சிறுவனைத் தாக்கிய பெண்ணொருவர் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

வாஷிங்டன் நகரைச் சேர்ந்த இந்தப் பெண் தற்போது சிறையில் வாடுகின்றார்.

ஐஸ்கிறீமை சிந்திய சிறுவனை மோசமாகத் திட்டி உணவு விடுதியைச் சுற்றி சிறுவனை விரட்டியுள்ளதுடன் உணவுப் பதார்த்தங்கள் மூலம் சிறுவனைத்தாக்கியுள்ளார்.

இவ்வாறான குற்றச் செயல்களுக்காக அமெரிக்காவில் 25 வருட சிறைத்தண்டனையையும் அனுபவிக்க நேரிடும்.

# தாய்வானில் தினசரி 39 பேர் 'சார்ஸ்' வைரஸால் பாதிப்பு!

தாய்வானில் நாளொன்றுக்கு 39 பேருக்கு 'சார்ஸ்' வைரஸ் காய்ச்சல் ஏற்படுகின்றது.

ஆயினும் இக்காய்ச்சல் காரணமாக இதுவரை அந்நாட்டில் 40 பேர் மட்டுமே பலியாகியுள்ளனர். 63 பேர் குணமடைந்து வைத்தியசாலையை விட்டு வெளியேறியுள்ளனர்.

'சார்ஸ்' வைரஸ் காய்ச்சலினால் பெரிதும் பாதிக்கப்பட்ட நாடு சீனாவாகும்.



ஈராக்கில் அபு செலான் கிராமத்தில் வசிக்கும் பெண்ணொருவர் படகு செலுத்திச் செல்கிறார்.

# தகவலில்லை!

(அல்சியஸ்)

அல்ஜீரிய பாலைவனத்தில் கடந்த இரண்டு மாதங்களுக்கும் மேலாகத் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் ஐரோப்பிய நாட்டவர்கள் 15 பேர் பற்றிய விபரங்கள் இதுவரை வெளியிடப்படவில்லை.

கடந்த பெப்ரவரியிலும், மார்ச் மாதத்திலும் 32 உல்லாசப் பயணிகள் காணாமல் போயினர்.

இவர்கள் அல்ஜீரியாவின் தென் பகுதியில் உள்ள புராதனகல்லறைக்கு விஜயம் செய்துள்ளனர்.

இவர்களை கிளர்ச்சியாளர்கள் பிடித்து வைத்திருந்ததுடன் 17 பேரைக் கடந்த வாரம் விடுதலை செய்தனர்.

## – அமெரிக்க வெள்ளை மாளிகை –

# செய்தித் தொடர்பாளர் பதவி விலகத் தீர்மானம்

(வாஷிங்டன்)

அமெரிக்க வெள்ளை மாளிகையின் செய்தித் தொடர்பாளராகக் கடமை வகித்து வரும் ஆரி பிச்சர் தனது பதவியை இராஜினாமா செய்யப்போவதாக அறிவித்துள்ளார்.

அமெரிக்க சனாதிபதி புஷ்ஷின் தலைமையிலான அரசின் செய்தித் தொடர்பாளராகப் பதவிவகித்து வரும் ஆர் றிச்சட் ஆப்கானிஸ்தான் மற்றும் ஈராக் மீது போர் தொடுப்பது தொடர்பாக அமெரிக்க அரசு எடுத்த பல முக்கிய முடிவுகளை வெளியிட்ட பெருமைக்குரியவர் ஆவார்.கடந்த இரண்டரை ஆண்டு காலமாக புஷ் அரசு எடுக்கும் பரபரப்பான முடிவுகளைப் பத்திரிகைகளுக்கு வெளியிட்டதன் மூலம் உலக தொலைக்காட்சிகளில் ஓயாது முகம் காட்டிவந்த அவர், அனைத்து மக்களுக்கும் நன்கு அறிமுகமானவர்.

# பாராளுமன்றத்தின் அதிகாரத்தை வெளிப்படுத்து

# பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவால் முடியுமா?

சிறிலங்காவில் பாராளுமன்றத்திற்கும், நிறைவேற்று அதிகாரத்திற்கும் இடையில்



ஏற்பட்டுள்ள போட்டி கடந்த வாரம் தீவிர மடைந்துள்ளமை வெளிப்படையான ஒன்று. சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்தின் அமைச்சரவையின் வசமிருந்த ஒரு பொறுப்பை தன் வசப்படுத்திக் கொண்டதை சரியெனவும், அதற்குத் தனக்கு அரசியல் அமைப்பு ரீதியாக அதிகாரம் உண்டெனவும் அடித்துச் சொல்லிவிட்டார். இவ்விவகாரத்தில் பின்வாங்கலுக்கே இடமில்லை என்பதில் அவர் உறுதியாக இருக்கின்றார். பொ. ஐ. முன்னணியும் இதற்கு உறுதுணையாக உள்ளது. ஜே.வி.பி. இது குறித்து கருத்துக் கூறாமையும் அதன் உள்ளக் கிடக்கையை வெளிப்படுத்துகின்றது.

அதேவேளை, அரசியலமைப்பு ரீதியாகப் பாராளுமன்றத்திற்கு உள்ள அதிகாரத்தைப் பறிக்கும் செயல் இது எனவும், மக்கள் ஆணையை மதிக்காது சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நடந்து கொண்டுவிட்டார் எனவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தி வருகின்றார்.

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்கு அதிகாரம் இருக்கின்றதோ இல்லையோ அமைச்சர் ஒருவரின் பொறுப்பிலிருந்த தேசிய லொத்தர் சபையை பிரதமரின் ஆலோசனையின்றி சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கையகப்படுத்தியது சனநாயக நெறிமுறைகளுக்கு முரணானது என சில விமர்சகர்கள் கூறுகின்றனர். தேசிய லொத்தர் சபை சுவீகரிப்பானது ஓர் எச்சரிக்கையை - மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கம் ஒன்றின் மீதான சனாதிபதியின் தேவையற்ற தலையீட்டு அடாவடித்தனத்தை - வெளிப்படுத்துகிறது. இதன் மூலம்

**வேலவன்**

மக்கள் ஆணையை சனாதிபதி சந்திரிகா மீறுகின்றார் என்பதாகிறது என அவர்கள் கூறுகின்றனர்.

இந்தச் சபையை அவர் கையகப்படுத்த சனாதிபதி நிதியத்திற்கு அபிவிருத்தி லொத்தர் சபை செலுத்த வேண்டிய நிதியைச் செலுத்தவில்லை என சனாதிபதி கூறியிருக்கிறார். ஆனால், இது அபாண்டமான குற்றச்சாட்டு என்பது அபிவிருத்தி லொத்தர் சபைத் தலைவரின் பதிலாகும்.

இவ்விவகாரம் நாட்டின் சமாதான முயற்சிகளைப் பாதிக்கும், பொருளாதாரத்தைப் பாதிக்கும்... இவ்வாறு ஒட்டுமொத்தமாக நாட்டையே மிக மோசமாகப் பாதிக்கும் என்பது, பல தரப்பட்டவர்களினதும் கருத்தாகும். இது எவராலும் மறுக்க முடியாத உண்மையும்கூட. ஆனால், இவ்விடயத்தில் விட்டுக் கொடுப்புக்கு இடமில்லை என்பது சனாதிபதியினதும் பிரதமரினதும் முடிவாகும். இந்த அதிகாரப் போட்டியால் டோக்கியோ மாநாட்டுக்கு அரசாங்கம் செல்வது கூடத் தடைப்படலாம் என்ற கருத்து சிறிலங்காப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவால் வெளியிடப்பட்டது.

இப்பொழுது அபிவிருத்தி லொத்தர் சபை கையகப்படுத்தலுக்குக் காரணமான சனாதிபதி நிதியத்தை அரசாங்கம் தன்வசம் எடுத்துக் கொள்ள முடிவு செய்திருக்கிறது. அதற்கான சட்ட மூலங்களைக் கொண்டு வந்து பாராளுமன்றத்தில் நிறைவேற்றக் குழு ஒன்றும் ரணில் விக்கிரமசிங்கவினால் அமைக்கப்பட்டிருக்கின்றது.

ஆரம்பத்தில் அரசியலமைப்பை மீறி பிரதமரின் ஆலோசனையைப் பெறாது சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நடந்து கொண்டு விட்டார் என ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் கூறியது. இது தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுக்கவும் அது ஆலோசித்தது. இப்பொழுது அதனை விட்டுவிட்டு பாராளுமன்றம் மூலமான நடவடிக்கையொன்றுக்கு ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் முயல்வது ஏன்?

அரசியலமைப்பு ரீதியாக சனாதிபதி செய்தது சரியா? என்ற கேள்விக்கு சிறிலங்காவின் சட்டவாளர்கள் இரு கட்சிகளாகப் பிரிந்து நிற்கின்றனர். சரியென்று கூறுவோரும் பலர், தவறென்று கூறுவோரும் பலர் உள்ளனர். இதற்குத் தீர்ப்புக் கேட்க உயர் நீதிமன்றம் செல்ல வேண்டிய தேவையுள்ளது. ஐக்கிய தேசிய முன்னணியைப் பொறுத்தவரையில் உயர் நீதிமன்றம் குறித்த ஐயப்பாடு அதற்கு எப்பொழுதும் உண்டு. சனாதிபதியால் உயர் நீதிமன்ற நீதியரசராக நியமிக்கப்பட்டுள்ள சரத் என். சில்வாவின் நியமனத்திற்கு ஊடகவியலாளர்கள் சிலர் எதிர்த்தது போல பலமான ஆட்சேபனையைத் தெரிவிக்காவிட்டாலும் ஐ.தே.க. விமர்சித்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். இவ்வாறான ஒரு நிலையில் உயர் நீதிமன்றத்தில் நியாயம் கிடைக்கும் என ஐ.தே.மு. அரசாங்கம் எதிர்பார்க்க இயலாது.

அத்துடன் சிறிலங்காவின் அரசியலமைப்பானது விசித்திரமான ஒன்று. இந்த அரசியலமைப்பானது ஒருகையால் கொடுக்கும் அதிகாரத்தை மறுகையால் பறிக்கும் ஓர் அரசியல் அமைப்பு. இந்த அரசியலமைப்பை உருவாக்கியவர் அல்லது உருவாக்க உதவியவர் எனக் கருதப்படும் பேராசிரியர் ஏ.ஜே. வில்சன் கருத்துக் கூறுகையில், இந்த அரசியலமைப்பிலுள்ள ஒருசரத்தை மறுசரத்து மறுதலிக்கும் வகையில் அமைந்திருக்கிறது எனக் கூறினார். இந்த அரசியலமைப்பு இறுதி நேரத்திலேயே தம்மிடம் காட்டப்பட்டதாகவும், கூடிய நேரத்தை தான் இவ்வாறு ஒன்றுக்கொன்று முரணாகக் காணப்பட்ட விடயங்களைத் திருத்துவதிலேயே செலவிட்டதாகவும் அவர் கூறினார்.

அதேவேளை இந்த அரசியலமைப்புக்கு அடிக்கடி திருத்தங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. இவை அநேகமாக, அரசியலமைப்பில் காணப்படும் குறைபாடுகளை நீக்குவதற்காகக் கொண்டு வரப்பட்டவையல்ல. அந்தந்த வேளைகளில் அரசாங்கத்திற்கு இடைஞ்சலாக அமையும் விடயங்களைச் சீர்செய்ய - நீக்கக் கொண்டு வரப்பட்டவையாகும். அப்போதைய சனாதிபதியும் இந்த அரசியலமைப்பின் மூலகர்த்தாவுமான ஜே.ஆர். ஜெயவர்த்தன பாராளுமன்றத்தில் தனக்கு இருந்த ஐந்தில் நான்கு பெரும்பான்மையை இதற்குப்பயன்படுத்தினார்.

எதிர்க்கட்சிகளும் ஆளும் கட்சியும் இணைந்து மேற்கொண்ட திருத்தங்கள் ஒரு சிலவே. உதாரணமாக சுயாதீன தேர்தல், பொலிஸ், நீதி ஆணைக் குழுக்களை



அமைப்பதற்காகக் கொண்டுவரப்பட்ட 17ஆவது திருத்தச் சட்டமூலம் அவ்வாறு அனைத்துக் கட்சிகளும் இணைந்தே கொண்டுவந்தன. அவ்வேளை சனாதிபதி சந்திரிகாவுக்கு இருந்த அரசியல் நெருக்கடி அதற்கான வாய்ப்பை ஏற்படுத்தியது. ஆனால் அது மனப்பூர்வமற்ற செயற்பாடுகளால் இன்னமும் சரியான முறையில் நடைமுறைக்கு இடப்படவில்லை.

எனவே இவ்வாறு மேற்கொள்ளப்படும் திருத்தங்கள் கூட அரசியலமைப்பில் பல உள் முரண்பாடுகளைத் தோற்றுவித்திருக்கின்றன. இவ்வாறாக இருக்கையில் அரசியலமைப்பைப் பயன்படுத்திக் கொள்ள ரணில் விக்கிரமசிங்க விரும்பாது இருக்கக்கூடும்.

ஆனால் இப்பொழுது அவர் எடுக்கும் முயற்சி கூட வெற்றியளிக்குமா? என்பது சந்தேகமே இப்பொழுது சனாதிபதியின் வசமுள்ள ஒரு நிதியத்தை பாராளுமன்றத்தின் வசப்படுத்த ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தைப் பயன் படுத்தத் திட்டமிடுகிறார். பாராளுமன்றத்தில் அவருக்குச் சாதாரண பெரும்பான்மையிருந்தாலும் அவ்வாறானதொரு சட்டத்தைக் கொண்டுவருவது இலகுவானதாக இருக்குமா? அல்லது ரணில் விக்கிரமசிங்க கடந்த ஆண்டில் கொண்டுவர முயன்ற 19ஆவது திருத்தச் சட்டமூலத்திற்கு ஏற்பட்ட கதிதான் இதற்கும் ஏற்படுமா?

பாராளுமன்றம் தேர்ந்தெடுக்கப்பட்டு ஒரு வருட காலத்தின்பின் எவ்வேளையிலும் பாராளுமன்றத்தைக் கலைக்க சனாதிபதிக்கு அரசியலமைப்பு ரீதியாக வழங்கப்பட்ட அதிகாரத்தைப் பறிக்க ஐக்கிய தேசிய முன்னணி கடந்த வருட இறுதியில் முயன்றது. இதற்காக 19ஆவது திருத்தச் சட்ட மூலத்தையும் கொண்டு வந்தது. ஆனால், அதனை நிறைவேற்ற பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை தேவையென உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பையடுத்து அம்முயற்சியை ஐ.தே.மு. கைவிட்டமை குறிப்பிடத்தக்கது. இப்பொழுதும் சனாதிபதியின் வசமுள்ள- அவரின் பெயரால் அழைக்கப்படும் நிதியத்தைப் பாராளுமன்றம் தன் வசப்படுத்திக் கொள்ள முடியுமா? என்ற கேள்வி இதே காரணங்களுக்காக எழுகின்றது.

இதற்கான சட்டமூலத்தை நிறைவேற்றி ரணில் விக்கிரமசிங்க கூறுவது போல பாராளுமன்றத்தின் அதிகாரத்தை சனாதிபதிக்குக் காட்டுவதற்கு அவருக்கு மூன்றிலிரண்டு பெரும்பான்மை தேவையாயின் சட்ட மூலம் நிறைவேறுவதற்கான சாத்தியப்பாடு குறைவாகவே உள்ளது. அவ்வாறு அவருக்கு மூன்றிலிரண்டு பெரும்பான்மையைப் பாராளுமன்றத்தில் திரட்டிக் கொள்ள முடியுமானால் அவர், இவ்வாறான சட்டமூலங்களுடன் காலத்தைச் செலவிடமாட்டார். சனாதிபதியைப் பதவி நீக்கம் செய்வதற்கு அவர் முயலுவார்.

இப்போதுள்ள அரசியலமைப்பின் படி - அதிலுள்ள தேர்தல் முறைமூலம் எந்தவொரு தனிக்கட்சியும் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை எட்டுவது மிகவும் சிரமமான காரியமாகும். முரணான மனப்போக்கும் அதிகாரவெறியும் கொண்ட தென்னிலங்கையின் இரு பிரதான கட்சிகளும் மாறிமாறி ஆட்சியமைக்க சந்தர்ப்பம் இருக்கின்ற சூழலிலே ஒரு கட்சி நிறைவேற்று அதிகாரத்தையும் மற்றொன்று பாராளுமன்றத்தையும் கைப்பற்றும் வாய்ப்புகள் அதிகமாகவே இருக்கிறது.

1994இல் ஐக்கிய தேசியக் கட்சி நிறைவேற்று அதி காரத்தையும் பொ.ஐ.மு. பாராளுமன்ற அதிகாரத்தையும் கொண்டிருந்த வேளை அன்றைய சனாதிபதி டி.பி. விஜயதுங்க தனது பதவிக்காலத்தின் இறுதிக் கட்டத்தில் இருந்தார். இதனால் பொ.ஐ.மு.வுக்கு இலகுவாக ஆட்சி செய்யக் கூடியதாக இருந்தது.

ஆனால் இப்பொழுது நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதியின் பதவிக்காலம் முடிய இன்னமும் இரண்டரை வருடங்களுக்கு மேலுள்ள நிலையில் "சகவாழ்வு அரசியலே" இவ் அதிகாரங்கள் முரண்பட்டுக் கொள்ளாதிருக்க வழியாகும். ஆனால் பொ.ஐ.மு. - ஐ.தே.மு.வுக்கு இடையேயுள்ள வரலாற்று ரீதியான அதிகாரப் போட்டியும், சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் இயல்பான குணமும் காரணமாக இந்த அதிகாரப் போட்டி முற்றுப்பெறப் போவதில்லை. இந்த அதிகாரப் போட்டி இனப்பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வொன்றை எட்டுவதற்கு மட்டுமல்ல, சிறிலங்காவின் எதிர் காலத்திற்கும் பெரும் குந்தகம் விளைவிப்பதாகவே இருக்கும்.

# டோக்கியோ மாநாட்டினால் தமிழருக்குப் பயன்கிட்ட வழி உண்டா?

சிறிலங்காவிற்கு நிதி உதவி வழங்குவதற்கான டோக்கியோ மாநாட்டில் விடுதலைப்புலிகளைப் பங்கேற்கச் செய்வதில் மேற்குலக நாடுகள் குறிப்பாக நோர்வே, அமெரிக்கா, யப்பான் போன்ற நாடுகள் அதிக ஆர்வம் காட்டிவருகின்றன. இதற்கென நோர்வேயும், யப்பானும் உயர்மட்டத்திலான இராஜதந்திர முயற்சிகளை மேற்கொண்டன என்று கூறினும் மிகையாகாது.

இந்தவகையில் யப்பானில் விசேட தூதுவர் யசுகி அகாஷி, நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் ஜான்பீற்றர்சன் ஆகியோர் தமிழீழத் தேசியத் தலைவர் வே. பிரபாகரன் அவர்களை சந்தித்துப் பேச்சுக்களை நடத்தியதைக் கூறமுடியும். ஆனால், விடுதலைப்புலிகள் இயக்கம் டோக்கியோ மாநாட்டில் தாம் பங்கேற்பதை இடைநிறுத்தியதற்கான காரணத்தினை தெளிவாக எடுத்துரைத்துள்ளதோடு தமது எதிர்பார்க்கையையும் வெளிப்படுத்தியிருந்தார்.

இதில் இரண்டுவிடயங்கள் முக்கியத்துவம் பெற்றவையாக இருந்தன.

(1) புரிந்துணர்வு உடன்பாட்டை அரசாங்கம் நிறைவு செய்யவில்லை என்பது

(2) வடக்கு -கிழக்கிற்கான அதிகார அமைப்பு ஒன்று புலிகளிடம் வழங்கப்படாத பட்சத்தில் புனர்வாழ்வு புனரமைப்புப் பணிகள் சாத்தியமாக மாட்டாது என்பது.

விடுதலைப்புலிகளின் இவ்விரு நிலைப்பாடும், எவையுமே நிராகரிக்கப்பட முடியாத யதார்த்தத்தின் பாற்பட்டதாகவும் தேவையின் பாற்பட்டதாகவும் உள்ளன. இந்நிலையில் தான் நோர்வே, யப்பான் ஆகிய நாடுகள் மேற்கொண்ட உயர்மட்ட இராஜதந்திர முயற்சிகள் முன்னேற்றம் காண்பதில் இடையூறுகளைச் சந்தித்தன.

அதாவது, விடுதலைப்புலிகளின் நியாயபூர்வமான கோரிக்கைகள் நிராகரிக்கப்பட முடியாதவையாகவும், இதேவேளை அரசாங்கம் விடுதலைப்புலிகளின் நிலைப்பாடு குறித்து உறுதியான பதில் எதையும் அளிக்க முடியாததொரு நிலையில் காணப்படுவதினாலும் இராஜதந்திர முயற்சிகள் பெரும் முன்னேற்றம் எதையும் இது வரையில் எட்ட முடியவில்லை. ஆயினும் இவ் இராஜதந்திர முயற்சிகள் தோல்வியடைந்து விட்டன எனக்கூறுவதற்கில்லை.

நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் ஜான்பீற்றர்சன் தமிழீழத் தேசியத்தலைவர் பிரபாகரன் அவர்களைச் சந்தித்த பின்னர் சிறிலங்காப்பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் பேச்சுக்களை நடத்தியதைத் தொடர்ந்து அரசாங்கத்தின் சிபாரிசுகளுடன் கூடியதொரு நகல் திட்டம் அடங்கிய கடிதத்தை நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் கெல்ஹேசன் விடுதலைப் புலிகளிடம் சமர்ப்பித்திருந்தார்.

ஆனால் இக்கடிதத்தில் உள்ளடக்கப்பட்ட விடயங்கள் உத்தியோகபூர்வமாக வெளியிடப்படாத நிலையிலும்- 'சிரான்' அமைப்பை சட்டவலுவுள்ளதாக ஆக்குவது குறித்தும் புரிந்துணர்வு உடன்பாட்டில் நிறைவேற்றப் படாத விடயங்களை ஒரு காலவரம்புக்குள் நிறைவேற்றுவதெனவும் அரசாங்கத்தரப்பில் உறுதி கூறப்பட்டதாக வெளிக்கசிந்த தகவல்கள் கூறுகின்றன.

ஆயினும், இக்கடிதம் தற்பொழுது விடுதலைப்புலிகளின் பரிசீலனையில் உள்ளது. இக்கடிதத்துடன் வன்னி வந்த நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் கெல்ஹேசன் தனது இப்பயணத்தை இருதினங்களுக்கானதாக திட்டமிட்டிருந்ததாகவும் அக்காலப்பகுதியில் மூன்று சுற்றுப் பேச்சுக்களை விடுதலைப் புலிகளுடன் நடத்த இருந்ததாகவும் தகவல்கள் கூறுகின்றன. ஆயினும் ஒரு சுற்றுப் பேச்சுடன் அவர் கொழும்பு திரும்பியமையானது பிரதமரின் கடிதத்தைத் தீர ஆராயாது புலிகள் பதில் அளிக்க முடியாததொரு நிலை இருந்ததனையே வெளிக்காட்டுவதாய் உள்ளது.

அதுமாத்திரமல்ல, திட்டமிட்டதற்கு முன்னதாகவே கொழும்பு திரும்பிய நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் கெல்ஹேசன் இரு தினங்களில்(திங்கட்கிழமை) மீண்டும் வன்னி வந்து புலிகளைச் சந்திப்பார் எனத் தகவல்கள் வெளியாகியிருந்தன. ஆயினும் அவரது வன்னி விஜயம் குறிப்பிட்ட நாளில் நடைபெறவில்லை. இதற்குத் தெற்கில் ஏற்பட்ட திடீர் வெள்ளப் பெருக்கில் அரசின் கவனம்முழுமையாகத் திரும்பி இருந்தமை கூடக்



காரணமாக இருக்கலாம். இந்நிலையில் டோக்கியோ மாநாட்டில் புலிகள் பங்கேற்பதாக முடிவு இன்னமும் உறுதி செய்யப்படாததொன்றாகவே உள்ளது.

விடுதலைப்புலிகள் டோக்கியோ மாநாட்டில் பங்கேற்பதன் மூலம், சமாதானத்தின் மீது தமது உறுதிப்பாட்டினையும், உத்தரவாதத்தினையும் வெளிப்படுத்த கூடியதாக இருக்கும். அதேவேளை, விடுதலைப்புலிகளுக்கு சர்வதேச ரீதியிலான அங்கீகாரமும், வடக்கு-கிழக்கு புனர்வாழ்வு, புனரமைப்பிற்கான நிதியும் கிடைக்கப்பெறும் என்பது விடுதலைப்புலிகளைச் சமாதான முயற்சியில் பங்கேற்க முயற்சிப்பவர்களின் நிலைப்பாடாகும்.

மறுவளமாக விடுதலைப்புலிகள் இம்மாநாட்டில் பங்கேற்காது போனால், தமது நிலைப்பாட்டைச் சர்வதேச சமூகத்தின் முன் வலியுறுத்தச் சிரமப்பட வேண்டியதாக இருக்கும் என்பது நோர்வே, ஜப்பான் போன்றன வலியுறுத்தும் விடயமாகும். நோர்வே ஜப்பான் போன்றவற்றின் அபிப்பிராயமாகவும் கூடக் கொள்ளத்தக்கதாக இருக்கலாம்.

ஆனால், நோர்வேயும், யப்பானும் பெரும் முயற்சிகளை மேற்கொள்கின்றன. அமெரிக்கா விருப்புக் கொண்டுள்ளது என்பதற்காக விடுதலைப்புலிகள் இயக்கம் தமிழ் மக்கள் மீண்டும் ஒரு தடவை ஏமாற்றப்படுவதற்கோ அன்றி நிர்க்கதியானதொரு நிலையினை அடைவதற்கானதொரு முடிவையோ எடுத்தல் முடியாது. விடுதலைப்புலிகள் இயக்கம் சமாதானத்தின் மீதான தனது பற்றுறுதியையும்,அர்ப்பணிப்பையும் ஏற்கனவே பெருமளவில் வெளிக்காட்டியுள்ளது. இதனால் பல பாதகமான விளைவுகளைக் கூட அது சகித்துக் கொள்ளவும் தாங்கிக் கொள்ளவும் வேண்டி இருந்தது.

நோர்வேயும் சரி, யப்பானும்சரி, அமெரிக்காவும் சரி சிறிலங்காவுக்கு நிதியுதவி வழங்குவதோ, அன்றி அதற்கு வேறு உதவிகளை வழங்குவதோ தனியாக இலங்கையில் நிலவவேண்டிய சமாதானத்தின் பாற்பட்ட விடயமல்ல, இவற்றில் இந்நாடுகளின் அபிலாசைகள் நலன்கள் என்பன நிறையவே உள்ளன. ஆனால், இவை நாட்டிற்கு நாடு நோக்கத்திலும் அளவிலும் மாறுபட்டவையாக இருக்கலாம்.

இன்று இலங்கைக்கு நிதி உதவி வழங்கும் விடயத்தில் விடுதலைப் புலிகளையும் இவர்கள் இணைத்துக் கொள்ள விரும்புவதானது-ஒருவகையில் இலங்கையில் அமைதி திரும்புவதற்கான ஒத்தாசை நடவடிக்கைகளாகக்கூட இருக்கலாம். அதாவது, இலங்கையில் சமாதானம் அவர்களுக்கு அவசியமானதாகக்கூட இருக்கலாம். இதனால், இலங்கை அரசாங்கமும் பெரும் அனுகூலங்களை அடையலாம். ஆனால், விடுதலைப் புலிகளையும் இணைத்துக் கொண்டு இலங்கைக்கு வழங்கப்படவுள்ள நிதி உதவியினால் தமிழ் மக்களுக்கு கிட்டப்போகும் நன்மை என்ன என்பதே இன்றுள்ள கேள்வியாகும். அதாவது, தமிழ் மக்களுக்கு இந்நிதியுதவி எந்தவகையில் சென்று சேரக்கூடியதாக இருக்கும். யுத்தத்தினால் பாதிப்பிற்குள்ளாகியுள்ள தமிழ் மக்களின் புனர்வாழ்வு, புனர்நிர்மாணத்திற்கு இவை கிட்டுமா?

ஏற்கனவே, விடுதலைப் புலிகளுக்கும் - சிறிலங்கா அரசாங்கத்திற்கும் இடையிலான பேச்சுவார்த்தை மூலம் உருவாக்கப்பட்ட உடனடி மனிதாபிமானப் பணிகளுக்கான உபகுழு (சிரான்) ஆரம்பிக்கப்பட்டு ஆறு மாத காலம் கடந்துவிட்ட நிலையிலும் அதன் திட்டங்கள் இன்னமும் செயலாக்கம் பெற முடியவில்லை. அதாவது, சிரான் அமைப்பிற்கான நிதி அதற்குக்கிடைக்க வில்லை. இதனால் அதன் செயற்பாடுகள் ஸ்தம்பித நிலையை அடைந்துள்ளன.

இவ்வாறு 'சிரான்' செயற்பட முடியாமற் போனமைக்கு நிதியின்மை என்பது முற்றுமுழுதான காரணியல்ல. சிறிதளவேனும் நோர்வே போன்ற நாடுகள் சிரானுக்கு அளித்த உதவிகள் உலக வங்கியிடம் உள்ளது. ஆனால், சிரான் ஒரு சட்டபூர்வமான அமைப்பாகக் கொண்டு நிதி வழங்குவதில் உள்ள சட்டச் சிக்கலே சிரான் செயற்பாட்டிற்கு இடையூறாகவுள்ளது.

அதாவது, 'சிரான்' ஒரு சட்டபூர்வ அமைப்பாக சர்வதேச உதவிகளைப் பெற்று வடக்கு - கிழக்குப் புனர்வாழ்விற்குப் பயன்படுத்தக் கூடிய அதிகாரம் கொண்ட அமைப்பாகச் செயற்படுவதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வில்லை. இன்றைய நிலையில், அது ஒரு சாத்தியமானதொரு நடவடிக்கை என்பதும் கேள்விக்குரியதே.

ஆனால், அரசாங்கம் இதனை வெளிப்படுத்துவதாக இல்லை. அதாவது, தமிழ் மக்களை ஏமாற்றும் வகையிலேயே நடந்து கொள்கின்றது. அத்தோடு, சிரான் அமைப்பின் செயற்பாட்டு தடங்கலுக்கு உலக வங்கி போன்றவற்றின் நிதி வழங்குவதற்கான கடுமையான விதிகளும் காரணம் என்ற ரீதியிலும் அதன் பேச்சுக்கள் உள்ளன. இந்த நிலையில் புதிதாக டோக்கியோவில் கிடைக்கப் பெறும் நிதியை வடக்கு கிழக்குப் புனர் வாழ்விற்கு என விசேடித்த முறையில் பயன்படுத்த சட்ட ரீதியிலான அங்கீகாரம் எவ்வாறு கிடைக்கப்பெறும்?

ரணில் விக்கிரமசிங்க இதற்கான உறுதிமொழியை எழுத்தின் மூலம் அன்றி வாய்மொழி மூலமோ கொடுத்தல் கூட அதனால் பயன் ஏதும் கிட்டுமோ என்பது கேள்விக்குரியதே. ஏனெனில், இதற்கு சிறிலங்கா அரசியல் யாப்பும் சரி, அதிகாரப்பீடத்தின் உச்சியில் இருப்பவர்களும் சரி இணக்கமானவையாக இருக்கப் போவதில்லை. அதாவது, வடக்கு - கிழக்கிற்கென தனியாக நிதியைப் பெற்று புனர்வாழ்வு புனரமைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள சிறிலங்கா அரசியல் யாப்பும் அனுமதிக்கப் போவதில்லை. சிறிலங்கா சனாதிபதியும் அதற்கு உடன்பாடான போக்கைக் கைக்கொள்ளப் போவதில்லை.

இந்நிலையில், விடுதலைப் புலிகள் டோக்கியோ மாநாட்டில் பங்குபற்றுவதினால் தமிழ் மக்களுக்கு என்ன பயன் கிட்டிவிடப் போகின்றது. விடுதலைப் புலிகள் தமிழ் மக்களையும், தம்மையும் ஏமாற்றிக் கொண்டு சிறிலங்கா அரசிற்கு நிதி உதவி கிட்டுவதற்கான நடவடிக்கைகளாக இது அமையமாட்டாதா?

அவ்வாறு இல்லாது, தமிழ் மக்களுக்கு இந்நிதி கிடைக்கப்பெறுவதை அரசாங்கம் உறுதி செய்வதாயின் வடக்கு - கிழக்கிற்கு வெளியில் இருந்து பெறப்படும் நிதியினை கைக்கொள்வதற்கான சட்ட அங்கீகாரம் பெற்றதொரு அமைப்பு உருவாக்கப்படுதல் வேண்டும். இதற்கு அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தயாராக இருத்தல் வேண்டும். இது இன்றைய அரசாங்கத்தின் சக்திக்குட்பட்ட விடயம். இல்லாதுவிடில் தமிழ் மக்களுக்கு இவ் அரசாங்கத்தினால் எதுவுமே செய்ய முடியாது என்பது நிரூபணமானதொன்றாகிவிடும்.

ஆகையினால் தமிழ் மக்களிற்கு நன்மையளிக்கக் கூடிய வகையில் அரசாங்கத்தரப்பின் உறுதிப்பாடுகள் புலிகளுக்கு வழங்கப்பட்டால் ஒழிய டோக்கியோ மாநாட்டில் புலிகள் பங்கேற்பது தமிழ் மக்கள் தரப்பிற்கு நன்மை அளிக்கும் ஒன்றாக இருக்கப் போவதில்லை.

இதேவேளை விடுதலைப்புலிகள் டோக்கியோ மாநாட்டில் பங்கேற்க வேண்டும் என வலியுறுத்தும் நோர்வே, யப்பான், அமெரிக்கா போன்றவற்றால், சிறிலங்கா அரசியல் யாப்பில் மாற்றத்தை ஏற்படுத்தவோ அன்றி இந்நிதி இடையூறு எதுவும் இன்றி வடக்கு-கிழக்குப் புனரமைப்புக்குச் சென்று சேரக்கூடியதானதொரு உறுதிமொழியையோ அறிவிக்க இயலுமா? பொதுவாக இவை உதவி வழங்குவதைத்தவிர அப்பாற் சென்றுவிடப் போவதில்லை. தமது தேவைக்கேற்றவிதத்தில் அரசாங்கத்தைக் கையாள்வதிலேயே குறியாக இருப்பது. அதனையும் மீறி அவர்கள் அக்கறை காட்டினும், உள்நாட்டு விவகாரத்தில் அவை தலையீடு செய்ய முற்படுவதாக - புதிய வடிவத்தில் பிரச்சினைகள் எழுதல் கூடும்.

ஆகையினால், உதவி வழங்கும் மாநாட்டில் புலிகள் கலந்து கொள்ளும் பட்சத்தில் உதவிகளைப் பெற்றுக் கொள்ளவுள்ள சிறிலங்காவின் குறிக்கோளும், உதவிகள் வழங்க முற்படுவோரின் நோக்கங்களும் நிறைவு செய்யப்படுகையில், விடுதலைப்புலிகளும், தமிழ் மக்களுமே இவ்விடயத்தில் 'கறிவேப்பிலை' போன்று பயனற்றவர்களாக ஆகிவிடும் சூழ்நிலை உருவாகக் கூடும். ஆகையினால் அத்தகையதொரு அவலநிலை தமிழ் மக்களுக்கு ஏற்படாதவாறு பார்த்துக் கொள்ளுதல் அவசியமாகிறது. அதாவது, டோக்கியோவில் வடக்கு-கிழக்கிற்கென வழங்கப்படும் நிதி வடக்கு-கிழக்கிற்கு வந்துசேர அரசால் உறுதி வழங்கப்படும் வரையில் மாநாட்டில் பங்கேற்பதில் பயன் ஏதும் இருப்பதாக இல்லை.

உரிமைக்கான போராட்டம் என்பது ஒருபாரிய கப்பலைச் செலுத்துவது போன்றதல்ல. காற்றையும், மழையையும் பொருட்படுத்தாது தமது பயணத்தை இலகுவாக மேற்கொள்வதற்கு, இது ஒரு சிறியபடகைச் செலுத்துவது போன்றதாகும். ஆகையினால், கடும் காற்று, மழை, கடற்கொந்தளிப்பு என்பனவற்றை எதிர்கொண்டு பயணத்தை மேற்கொள்ளுதல் வேண்டும். இதேவேளை தமது இலக்கையும் அடைந்தாக வேண்டும். ஆகையினால் படகு சிறிதாக இருப்பினும் உறுதிமிக்கதாகவும், மாலுமிகள் சிறந்த படகோட்டிகளாகவும் இருத்தல் வேண்டும். படகு உறுதியற்றதாகவோ மாலுமிகள் வானிலையிலும், கடற்பரப்பிலும் ஏற்படக் கூடிய மாற்றங்களை முன்னுணர்ந்து கொள்ளக் கூடிய திறமையற்றவர்களாகவோ இருப்பின் படகு வெற்றிகரமாகக் கரை சேர முடியாது போய்விடும்.

ஜெயராஜ்

- சிறிலங்கா நீதிமன்றத்தை அவமதித்த -

# ஜான் பீற்றர்சன், அகாஷி மீது உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும்

## சனாதிபதியிடம் ஜே. வி. பி. கோரிக்கை

(கொழும்பு)

**நோர்வே வெளியுறவு அமைச்சர் ஜான் பீற்றர்சன், ஜப்பானின் விசேட தூதுவர் யசுகி அகாஷி ஆகியோர் சிறிலங்காவின் சட்டத்தையும் நீதிமன்றத்தையும் அவமதித்துள்ளதாக ஜே.வி.பி. விசனம் தெரிவித்துள்ளது.**

இவர்கள் விடுதலைப்புலிகளின் தலைவரைச் சந்தித்ததன் மூலமே இந்த நாட்டின் சட்டத்தையும் நீதி மன்றத்தையும் அவமதித்துள்ளதாக சிறிலங்கா சனாதிபதிக்கு ஜே.வி.பி. கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள் ளது. இது தொடர்பாக உரிய நட வடிக்கைகளை மேற்கொண்டு இனி மேல் இதுபோன்ற சம்பவங்கள் நிகழாதவாறு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் ஜே.வி.பி. தனது கடிதத்தில் கோரிக்கை விடுத்துள்ளது.

அத்துடன் இந்த இராஜதந்திரி களுக்கு எதிராக உரிய நடவடி க்கைகளை எடுக்குமாறும் அந்தக் கடிதத்தில் ஜே.வி.பி. வலியுறுத்தி உள்ளது. இதேவேளை, ஜப்பான் மாநாட்டில் விடுதலைப்புலிகளைக் கலந்து கொள்ளச் செய்யும் நோர்வே ஜப்பான் அரசாங்கங்களின் முயற்சி கண்டிக்கத்தக்கதென ஜே.வி.பி கூறியுள்ளது.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடை பெற்ற ஊடகவியலாளர் சந்திப் பிலேயே ஜே.வி.பி.யின் பிரச்சாரச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச இந்தக் கருத்தைக் கூறியுள்ளார். ஜப்பானிய விசேட தூதுவர் யசுகி அகாஷி புலிகளை இம்மாநாட்டில் கலந்து கொள்ளச் செய்ய முயற்சி எடுத்து வருகிறார் என்றும் விமல் வீரவன்ச கூறியுள்ளார்.

## அனர்த்த முகாமைத்துவ குழு நியமனம்!

(கொழும்பு)

வெள்ளத்தினாலும் மண்சரிவுகளாலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கவென அவசர கால அனர்த்த முகாமைத்துவ குழுவினால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இக்குழுவிற்கு அமைச்சர் கரு ஜெயசூரிய தலைமை தாங்குகிறார். இதில் அமைச்சர்களான ரவீந்திர சமரவீர, திலக் மாரப்பன, ஜோன் அமரதுங்க ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர்.

## மரியன்னையின் திருச்சொரூபத்திற்கு தாண்டவன் வெளியில் விசேட ஆராதனை

(கொழும்பு)

போர்த்துக்கல் நாட்டின் பற்றிமா திருப்பதியிலிருந்து இலங்கைக்குக் கொண்டு வரப்பட்டுள்ள பரிசுத்த மரியன்னையின் திருச்சொரூ பத்திற்கு விசேட ஆராதனைகள் நடைபெற்றுள்ளன.

முக்கிய நிகழ்ச்சியாக தாண்டவன் வெளி வியாகுலமாதா ஆலயத்திலிருந்து புளியந்தீவு புனித மேரி அன்னை இணைப்பேராலயம்வரை மரியன்னையின் திருச் சொரூபப் பவனி இடம் பெற்றது.

ஊர்வலத்தில் போர்த்துக்கல் பிறேசில் நாடுகளைச் சேர்ந்த அருட்தந்தையர்கள் உட்பட அதிக எண்ணிக்கையானஅருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

ஊர்வலத்தின் இறுதியில் இணைப்பேராலயத்தில் மட்டு. திருமலை ஆயர் அதி. வண. கலாநிதிகிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகையினால் நாட்டின் சமாதானத்திற்கென திருப்பலி ஒப்புக்கொடுக்கப் பட்டது.

## தியாக தீபம் திலீபன் மருத்துவமனைகளில் 14 ஆயிரத்துக்கு மேற்பட்டோருக்கு சிகிச்சை

கடந்த மாதத்தில்10 தியாக தீபம் திலீபன் மருத்துவமனைகளில் 14 ஆயிரத்துக்கு மேற்பட்டோர் சிகிச்சை பெற்றுள்ளனர். கடந்த மாதம்தியாக தீபம் திலீபன் மருத்துவ சேவையினரால் நடாத்தப்படும் ஆலங்கேணி, ஐயன்கன்குளம், மாங்குளம், நைனாமடு, கற்சிலைமடு, அடம்பன், அளம்பில், நெடுந்தீவு, ஆழியவளை, புளியங்குளம் ஆகிய பத்து மருத்துவ சிகிச்சை நிலையங்களிலுமே பதினான்காயிரத்து முன்னூற்று இருபத்தைந்து நோயாளர்கள் மருத்துவ சிகிச்சை பெற்றுள்ளனர். இதில் வைரஸ் காய்ச்சல் - 1880, மலேரியாக்காய்ச்சல் - 764, சுவாசப்பாதை - தொற்று நோய் - 2334, நெருப்புக் காய்சசல் - 05, தோல் நோய்கள் - 604, பல் நோய்கள் - 287, கண்நோய்கள் - 145, வயிற்றோட்டம் - 231, குருதிச் சோகை - 171, குடற்புழுத்தொற்று - 1207, நாய்க்கடி - 82, பாம்புக்கடி - 29, காயங்கள் - 1168, சிறு நீர் வழித்தொற்று - 231 ஆகிய நோய்களுக்குச் சிகிச்சை பெற்றனர் மருத்துவ சிகிச்சைநிலையங்களை அண்மித்துள்ள கிராமங்களில் சுகாதார விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் நடாத்தப்பட்டமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

## கனேடியத் தூதுவர் கிழக்கிற்கு ஐந்துநாள் விஜயம்!

(திருமலை)

சிறிலங்காவுக்கான கனடா தூதுவர் திருமதி வலேரி ரேமண்ட் ஐந்து நாள் பயணம் ஒன்றை மேற்கொண்டு நேற்றுமுன்தினம் கிழக்கு மாகாணத்துக்குச் சென்றுள்ளார்.

திருகோணமலைக்குச் சென்ற இவர் இரண்டு தினங்கள் திருமலையிலும், அடுத்த இரண்டு தினங்கள் மட்டக்களப்பிலும், இறுதி நாள் அம்பாறையிலும் தங்கி இருப்பார்.

கிழக்குப் பல்கலைக்கழக திருமலை வளாகத்துக்கு விஜயம் செய்த இவர் ஒரு தொகுதி நூல்களை அன்பளிப்பு செய்துள்ளார்.

இவர் இன்று திருமலையில் திருமலை மாவட்ட முன்னேற்றச் சங்க தூதுக் குழுவையும் ஏனைய முக்கியஸ்தர்களையும் சந்தித்து உரையாடவுள்ளார். (25)

## சமகாலக் கருத்தரங்கு

வவுனியா மாவட்டத்தில் விடுதலைப்புலிகளினால் சமகால அரசியல்கருத்தரங்குகள் நடத்தப்பட்டுவருகின்றன.வவுனியா, கந்தாரம் பகுதி யில் கடந்த ஞாயிறன்று இது தொடர்பாக கருத்தரங்கு இடம்பெற்றது.

இதில் வவுனியா மாவட்ட மகளீர் அரசியல்துறைப்பொறுப்பாளர் அலை உரையாற்றினார்.

இன்றைய அரசியல் நிலை குறித்தும் விடுதலைப்புலிகளின் நிலைப்பாடு குறித்தும் இவர் தனது உரையில் எடுத்துக்கூறினார்.

## தென்னை மானியத் திட்டத்தின் விபரம் தொடர்பாக அறிவிப்பு

(அலுவலக செய்தியாளர்)

தென்னை மானியத் திட்டத்தின் கீழ் தென்னைகளுக்கு உரமிடல் மற்றும் உரிமட்டை குழி அமைத்தல் போன்றவற்றிற்கு மானியம் வழங்கல் தொடர்பான விபரம் தெரியவந்துள் ளது.

இது குறித்து கிளி. மாவட்ட தென்னை அபிவிருத்தி அலுவலர் தனிநாயகம் அவர்களுடன் எமது செய்தியாளர் தொடர்பு கொண்ட பொழுது தெரிவிக்கையில;

தென்னைகளுக்கு உரம் இடப்பட்டிருக்கும் பட்சத்தில் உரம் இடப்பட்ட முழுத்தொகையில் 20 வீதப் பணம் மானியமாக வழங்கப்படுமெனவும் அதற்கு அங்கீகரிக்கப் பட்ட தனியார் நிறுவனங்களில் உரம் பெற்றுக்கொண்ட பற்றுச் சீட்டு சமர்ப்பிக்கப்படவேண்டுமெனவும், மற்றும் உரிமட்டை குழி அமைத் தலைப் பொறுத்தவரையில் ஒரு ஏக்கருக்கு 30 உரிமட்டை குழிகள் அமைக்கப்படல் வேண்டுமெனவும், உரிமட்டைக் குழி அமைக்கப்படும் பொழுது 4 தென்னை மரங்களுக் கிடையில் அல்லது 2 தென்னை மரங்களுக்கு குறுக்காக குழி அமைக்க முடியும்.

8'x4'x2'பிரமாண ஒரு குழியினுள் 300 உரிமட்டைகள் இடப்பட்டிருத் தல் வேண்டும். அப்படி இடப்பட்டிருக்கும் பட்சத்தில் 300 உரிமட்டைகள் இடப்பட்ட ஒரு குழிக்கு 80 ரூபா வீதம் வழங்கப்படவுள்ளதெனவும் தெரிவித்தார். (சோ)

## முச்சக்கரவண்டிச் சாரதி மீது பொலிஸ் அதிகாரி தாக்குதல்!

### சாரதிகள் மறியல்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு நகரில் பொலிசாருக்கு எதிராக முச்சக்கரவண்டிச் சாரதிகள் மறியல் போராட்டம் ஒன்றை நடத்தியுள்ளனர். மட்டக்களப்பு நகரில் முச்சக்கரவண்டிச்சாரதி ஒருவர் போக்குவரத்து பொலிஸ் அதிகாரி ஒருவரால் தாக்கப்பட்டதை அடுத்தே இப்போராட்டம் நடத்தப்பட்டுள்ளது.

பொலிஸ் நிலையம் முன்பு நேற்றுமுன்தினம் இப்போராட்டம் நடத்தப்பட்டது. இதனால் போக்குவரத்துக்கள் தடைப்பட்டிருந்தன.

## முகாமைத்துவ வலுப்படுத்தல் பயிற்சி நிறைவு விழா

சர்வதேச யுனிசெவ் நிறுவனத்தின் அனுசரணையுடன், தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரால் நடாத்தப்பட்ட திட்ட முகாமைத்துவ வலுப்படுத்தல் பயிற்சி நெறியினை நிறைவு செய்தவற்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தில் நடைபெறவுள்ளது.

பயிற்சி நெறியினை நிறைவு செய்த 38 பேருக்கு இன்று மு.ப 10.00 மணிக்கு மேற்படி சான்றிதழ் வழங்கும் நிகழ்வு இடம்பெறவுள் ளமை குறிப்பிடத்தக்கது. (சோ)

## கண்நோய் தீவிரம்!

(கொழும்பு)

மத்திய மாகாணத்தில் தற்போது கண்நோய் தீவிரமாகப் பரவிவருவதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

குறிப்பாக கண்டி, மாத்தளை, நுவரெலியா பிரதேசங்களில் இக் கண்நோய் தீவிரமாகப் பரவி வருவதாகவும் இதனால் பாதிக் கப்பட்ட நோயாளர்கள் அரச வைத்தியசாலைகளிலும், தனியார் மருத்துவ மனைகளிலும் சிகிச்சை பெற்று வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## உயர்தரப்பரீட்சையை 3வாரங்கள் பிற்போடுக

### - கல்வியமைச்சுக்கு வேண்டுகை

(கொழும்பு)

கல்விப்பொதுத்தராதர உயர்தர பரீட்சையை மூன்று வாரங்களுக்கு பிற்போடுமாறு கல்வித்துறைசார் அதிகாரிகள் சங்கத்தினர் அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

வெள்ளம், மண்சரிவு போன்ற அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட பரீட்சார்த்திகள் பரீட்சையில் தோற்ற முடியாது என அச்சங்கம் சுட்டிக் காட்டி உள்ளது.

பரீட்சை நிலையங்களில் உயர் அதிகாரிகளும் கண்காணிப்புகளில் ஈடுபட்டிருக்கும் ஆசிரியர்களும் கூட வெள்ளத்தினால் நிர்க்கதியாகி அகதிகளாக மாறி உள்ளனர் என அமைச்சிடம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## 3ம் ஆண்டு நீங்காத நினைவில்

தாயின் மடியில்: 14 - 12 - 1984



தாயக மண்ணில்: 21 - 05 - 2000

**2ஆம் லெப் -சதீஸ்**

**மகாலிங்கம்-- மகேஸ்வரன் (கிரி)**

சங்கத்தார் வயல் இயக்கச்சி (யாழ்)

மூன்று ஆண்டுகள் என்ன முன்னூறு ஆண்டுகள் ஆனாலும்
உன் நினைவுகள் எம்மை விட்டு அகலாது சகோதரா என்
அன்னை மடிதனில் நான்காம் மைந்தனாய் வந்துதித்தாய்
நீ பதினான்கு ஆண்டு வரை எம்முடன் இருந்து எங்கள்
அன்பினைப் பெற்றவனே வீரகாவியம் படைக்கவென வீறு
நடை கொண்டவனே ஆனையிறவு அழிக்க வென சென்றாய்
பின் நீ பிறந்த இடம் வென்று முடித்து எங்கள் வீட்டில்
உயிர் கொடுத்து விட்டு நீண்ட – தூரம் சென்று
பல இராணுவ முனைகளை வென்று கைதடி என்னும் வீர
மண்ணிலே வீரத்தை விதைத்து விட்டவனே சகோதரா
உன் நினைவுகள் அலையாய் எம் மனதில் அலை
பாயுதடா மாவீரனே।

21-05-2003 அன்று எமது இல்லத்தில் நடைபெறும் நினைவு நாள் நிகழ்விலும் மதிய போசன வைபவத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு சக போராளிகள், உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தகவல்:-
**ம.ரேவதி ம.தர்சிகா,**
சாந்தபுரம் முன்பள்ளி அருகாமை,
கிளிநொச்சி.

**என்றும் உங்கள் நினைவுடன்**

**குடும்பத்தினர்.**

(3265)



## சிந்தனைக்கு

விடுதலை வேண்டி நிற்கும் ஒரு தேசிய சமுதாயத்தின் உறுதிப்பாட்டை, எந்தவொரு சக்தியாலும் அழித்துவிட முடியாது.

- தமிழீழத் தேசியத் தலைவர்.

ஈழநாதம்
EELANATHAM மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 21-05-2003

## வரவு - செலவு கணக்கின்றி!

1996 இல், முல்லைத்தீவு இராணுவ முகாம் விடுதலைப்புலிகளினால் கைப்பற்றப்பட்ட போது படையினருக்கு ஏற்பட்ட இழப்பு, அங்கவீனமுற்றோர், காணாமற் போனோர் தொகை என்பன குறித்த விபரங்களைப் பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவிடம் பொ.ஐ. முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினரான ஜெயலத் பெர்னாண்டோ புள்ளே கோரியுள்ளார். அது ஒருபுறம் வேடிக்கைக்குரியதாகவும், மறுபுறத்தில் முன்னைய ஆட்சியில் பங்கேற்றவர்களின் அவலத்தை வெளிப்படுத்துவதாகவும் உள்ளது.

ஏனெனில், முல்லைத்தீவில் இராணுவ முகாம் தாக்கி அழிக்கப்பட்ட போது ஆட்சியிலிருந்த பொ.ஐ.முன்னணி அரசாங்கத்தின் சிரேஷ்ட அமைச்சர்களில் ஒருவரான ஜெயலத் பெர்னாண்டோ புள்ளேயின் இக்கேள்வியானது கடந்த ஆட்சிக் காலத்தில் யுத்தத்தில் ஏற்பட்ட இழப்புக்கள் எத்தனை தூரம் மறைக்கப்பட்டிருந்தன. அன்றிக் கடந்தகால ஆட்சித் தலைமையின் அறிவிப்புக்களை அவ் அரசாங்கத்தில் பங்கேற்ற சிரேஷ்ட அமைச்சர்களே நம்பத் தயாராக இருக்கவில்லை என்பதையே வெளிப்படுத்துவதாய் உள்ளது.

சனாதிபதி சந்திரிகாவும், அவரது மாமனாரும் பிரதிப் பாதுகாப்பு அமைச்சருமான அனுருத்த ரத்வத்தவும் உண்மைக்கு மாறான வகையில் பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளனர் என்பது அனைவருக்கும் தெரிந்ததொன்றாகவே இருந்தது. ஆனால், அமைச்சரவைச் சகாக்களுக்குக் கூடத் தெரியாது உண்மைகள் மூடிமறைக்கப்பட்டன. பொய்கள் பேசப்பட்டன என்பதையே ஜெயலத் பெர்னாண்டோ புள்ளேயின் தற்போதைய கேள்வி வெளிக்காட்டுவதாய் அமைகின்றது. இதன் மூலம் சனாதிபதி சந்திரிகா தனது சிரேஷ்ட அமைச்சர்களின் ஆலோசனைகளைக் கேட்கவில்லை என்பது மட்டுமல்ல, அவர்களுடன் உண்மை பேசவில்லை என்பதும் வெளிப்படுவதாகிறது.

சனாதிபதி சந்திரிகாவும், அவரது பிரதிப் பாதுகாப்பு அமைச்சருமான அனுருத்த ரத்வத்தையும் யுத்தத்தில் ஏற்படும் ஆளணி இழப்புப் பற்றி எவ் வேளையிலுமே கவலை கொண்டிருக்கவில்லை, அவ்வாறு கவலை கொள்பவர்களாக இருந்திருப்பின் அவர்கள் இராணுவ ஆலோசகர்கள், அதிகாரிகளின் ஆலோசனையினையும் மீறி வடக்கில் பாரிய படை நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்க மாட்டார்கள். குறிப்பாக ஜயசிக்குறு போன்ற நடவடிக்கைகளை ஆரம்பத்திலேயே நிறுத்தியிருப்பர்.

எவ்வாறு ஆளணி இழப்புக் குறித்துக் கவலை கொள்ளவில்லையோ அதே போன்று இராணுவத் தளபாட இழப்புக் குறித்தும் அன்றி பொருளாதார இழப்புக் குறித்தும் கவலை கொண்டிருக்கவில்லை. பொ.ஐ.முன்னணியிடம் இருந்து ஆட்சிகளைக் கைப்பற்றிய பின்னர் ஐ.தே.முன்னணி அரசாங்கம் விடுத்த அறிக்கைகளே இதனை விளக்குவதாக இருந்தன

அதாவது பாதுகாப்பு அமைச்சு கொள்வனவு செய்த ஆயுத தளபாடங்கள் குறித்தோ அன்றி அதற்குச் செய்த கொடுக்கல் வாங்கல்கள் பற்றியோ எதுவித ஆவணங்களும் இல்லை. இதனால் பாதுகாப்பு அமைச்சு செலுத்த வேண்டிய கடன் தொகை பற்றி மதிப்பிடப்பட முடியாதுள்ளது. பல தரப்பில் இருந்தும் தமக்குப் பணம் வழங்கப்பட வேண்டும் எனக் கோரிக்கைகள் வந்தவண்ணமுள்ளன என அறிக்கை தெரிவித்திருந்தது.

இந்த வகையில் பார்க்கையில் பொ.ஐ.முன்னணி ஆட்சிக் காலத்தில் அதன் வரவு – செலவு குறித்த ஐந்தொகை எதுவுமே அதனிடம் இருந்ததில்லை. அரசாங்கம் தனக்குத் தேவையான நிதியை அரச உடமைகளை விற்றோ, வெளிநாடுகளிடம் கடன்களைப் பெற்றோ திரட்டிக் கொண்டது. அதனைக் கொண்டு சமாதானத்திற்கான யுத்தம் என்ற பெயரில் வடக்கு–கிழக்கில் ஆக்கிரமிப்பிற்கான அழிவு யுத்தம் ஒன்றை நடத்தியது.

எவ்வாறு பொருளியல் ரீதியில் ஐந்தொகை எதையும் கொண்டிருக்கவில்லையோ அதே போன்று இராணுவத்தின் உயிரிழப்பு, ஆயுததளபாட இழப்பு என்பன குறித்தும் அது அக்கறை கொண்டிருக்கவில்லை என்பதே உண்மையாகும். இத்தகையதொரு நிலைக்கு எவ்விலை கொடுத்தாவது தமிழ் இனத்தை அழித்து விட வேண்டும் என அவர்கள் கொண்டிருந்த வெறித்தனம் மட்டுமல்ல, ஏழை, எளிய மக்களின் உயிர்களை அவர்கள் ஒரு பொருட்டாகக் கொள்ளாமையும் காரணமாகும்.

அதாவது, யுத்தத்தில் பங்கேற்ற இராணுவத்தினரில் 90 வீதத்திற்கு மேற்பட்டவர்கள் கிராமப்புற ஏழை விவசாயிகளின் குடும்பத்தைச் சார்ந்த இளைஞர்களே. இவர்கள் யுத்தத்தில் பலியாவதைப் பற்றியோ அன்றி அங்கவீனம் அடைவதைப் பற்றியோ ரத்வத்தையோ, சந்திரிகாவோ கவலை கொள்ளவில்லை. அவர்களின் இறப்பு, அன்றிக் காணாமற் போதல் என்பன குறித்து அவர்களுக்கு அக்கறை எதுவும் இருக்கவில்லை. இவ் இராணுவத்தினரின் குடும்பத்தினருக்கு அரசிற்கு எதிரான கருத்தினை உருவாக்கக்கூடிய பலமோ, அறிவோ இருக்கவில்லை. இதனால் ஆட்சியாளர்கள் தமது வசதிக்கும், தேவை க்கும் ஏற்றவிதத்தில் இறந்த இராணுவத்தினரின் தொகையைக் கொல்லப்பட்டவர்கள், காணாமற் போனவர்கள் பட்டியலில் இணை த்துக் கொண்டனர்.

இதன் விளைவாகவே ஜெயலத் பெர்னாண்டோ புள்ளே தற்போதைய ஐ.தே.முன்னணி அரசாங்கத்திடம் தமது ஆட்சிக்கால இழப்புக் குறித்து விபரம் கோர வேண்டிய அவல நிலை உருவாகியுள்ளது. ஆனால், இந்நிலையிலும் மீண்டும் ஆட்சி அதிகாரத்திற்கு வரவும், மீண்டும் யுத்தத்தைத் தொடரவும் சனாதிபதி சந்திரிகா மேற்கொள்ளும் முயற்சியானது சிங்களவர்களை முற்றாக அழித்தே ஆயினும், தமிழருக்கு எதிரான யுத்தத்தில் வெற்றிபெற்று விட வேண்டும் என்ற அவரது வெறித்தனத்தையே காட்டுவதாய் உள்ளது. இது இனவெறி என்பதைவிட அவரின் அகந்தையின் வெளிப்பாடே ஆகும். அவ்வாறு இல்லாது விடில் கடந்தகால யுத்தம் கொடுத்த படிப்பினை அவரைச் சிந்திக்க வைத்திருக்கும். ஆனால், வரவு–செலவுக் கணக்கே இல்லாதவர் இலாப–நட்டத்தின் அடிப்படையில் தீர்மானம் எடுப்பாரென எவ்வாறு எதிர்பார்க்க முடியும்.

# சனாதிபதிக்கான அதியுயர் பாதுகாப்பு வலய விரிவாக்க யோசனை அரசால் நிராகரிப்பு!

(கொழும்பு)

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் பாதுகாப்பிற்கு காலி முகத்திடல் வரை அதியுயர் பாதுகாப்பு வலயம் விஸ்தரிக்கப்பட வேண்டும என்று சனாதிபதியின் செயலாளரால் கோரிக்கை விடப்பட்டுள்ளது. ஆனால், இக் கோரிக்கையை சிறிலங்கா அரசாங்கம நிராகரித்துள்ளது.

தற்பொழுது சிறிலங்கா அரசாங்கத்திற்கும், சனாதிபதிக்கும் இடையே நிலவும் அதிகாரப் போட்டியை அடுத்து சனாதிபதியினதும் அவரது ஆலோசகர் லக்ஷ்மன் கதிர்காமரதும் பாதுகாப்பைக் குறைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகச் செய்திகள் வெளியாகியிருந்தன.

இதனையடுத்து சனாதிபதி சார்பில் அவரது செயலாளர் பாலபட்ட பெந்தி படைத்துறை அமைச்சர் திலக் மாரப்பனவுக்கு அவசரக் கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தார்.

சனாதிபதி மாளிகையைச் சுற்றி உள்ள பகுதிகள் அதியுயர் பாதுகாப்பு வலயங்கள் ஆக்கப்பட வேண்டியதன் அவசியங்கள் குறித்து அவர் அந்தக் கடிதத்தில் விளக்கியுள்ளார்.

அத்துடன் இந்தப் பாதுகாப்பு வலயமானது காலி முகத்திடல் வரை விஸ்தரிக்கப்பட வேண்டும் என்றும் அவர் தனது கடிதத்தில் விளக்கியுள்ளார்.

இந்த நிலையில், காலி முகத்திடல் வரை பாதுகாப்பு வலயத்தை விஸ்தரிக்கும் யோசனையை நிராகரிப்பதாக அரச தரப்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

# உ/த பரீட்சையில் சிங்கள மொழி வினாத்தாள் வெளியானமை குறித்த விசாரணைக்கு உத்தரவு!

(கொழும்பு)

கல்விப் பொதுத்தராதர உயர் தரப் பரீட்சையின் சிங்கள மொழி முதலாவது வினாப்பத்திரம் பரீட்சை நடைபெறுவதற்கு முன்னர் வெளியாகி இருப்பதாகத் தகவல்கள் வெளி யாகியுள்ளன.

இது குறித்து விசாரணை நடத்துமாறு பொலிசாருக்கு உத்தரவிட்டுள்ளதாகக் கல்வி அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு தெரிவித்துள்ளார்.

இந்த வினாத்தாளில் இடம்பெற்ற முக்கிய கேள்விகளைத் தனியார் வகுப்புக்களை நடத்தும் ஆசிரியர் ஒருவர் மாணவர்களிடம் வழங்கியுள்ளார்.

இதனை அடுத்தே விசாரணைகளுக்கான உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

சிங்கள மொழி வினாத்தாள் தொடர்பாக பரீட்சைகளை மீண்டும் நடத்த வேண்டுமா? என்பதைப் பெறுபேறுகளை ஆராய்ந்த பின்னர் தீர்மானிக்கப் போவதாக அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளர்.

# ஐம்பதுக்கும் மேல் படுகொலைகளைப் புரிந்த இரு பாதாள உலகக் குழுக்களைப் பிடிக்க முயற்சி

(கொழும்பு)

அம்பாந்தோட்டை சூரியவெலவை மையமாக வைத்து தென் பகுதியில் 50 இற்கும் அதிகமான மனிதப் படுகொலைகளைப் புரிந்து கோடிக் கணக்கான பணத்தைக் கப்பமாகப் பெற்றுவந்த அண்ணன், தம்பி என அழைக்கப்படும் இரு பாதாள உலகக் கோஷ்டியைச் சேர்ந்தவர்களைக் கைது செய்வதற்கு பொலிசார் தீவிர நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தென்பிராந்திய பிரதிப பொலிஸ்மா அதிபர் டீ.டபிள்யூ. பிரதாபசிங்க தெரிவித்துள்ளார்.

இவர்கள் புரிந்த ஐம்பதிற்கும் மேற்பட்ட கொலைகளில் கூடுதலாக வர்த்தகர்களே அடங்குவர். அரசியல்வாதிகள் சிலரதும், சில பொலிஸ் அதிகாரிகளதும் பாதுகாப்பு இவர்களுக்கு கிடைத்து வருவதால் இவர்கள் எவ்வித அச்சமுமின்றி படுபாதகச் செயல்களைப் புரிந்து வருகின்றனராம்.

இவர்கள் யார் என்று இனங் காணப்பட்டுள்ளதாக நீதிமன்ற அனுமதியைப் பெற்று இவர்களின் புகைப்படங்கள் பகிரங்கமாக வெளியிடப்படும் என்றும், இவர்களைப் பற்றித் தகவல் தருவோருக்கு பெருந் தொகைப் பணம் சன்மானமாக வழங்கப்படும் என்றும் பிரதிப் பொலிஸ்மா அதிபர் தெரிவித்துள்ளார். இந்தப் பாதாள உலகக் கோஷ்டியைப் பிடிப்பதற்கு பல பிரிவுகளாகப் பொலிஸார் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்றும், இதையறிந்த இவர்கள் பிரிந்து சென்று தற்போது தலைமறைவாகியுள்ளனர் என்றும், எனினும் விரைவில் இவர்களைக் கைது செய்துவிடுவோம் என்றும் பிரதிப் பொலிஸ்மா அதிபர் தெரிவித்துள்ளார்.

### உலகக் கிண்ணப் போட்டியில்

# இந்தியக் கிரிக்கெட் வீரர்களால் வருவாய் இழந்த கம்பனிகள் போர்க் கொடி!

அண்மையில் நடைபெற்ற உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியில் அனுசரணையாளராக இருந்த சில முன்னணிக் கம்பனிகள் சர்வதேச கிரிக்கெட் சங்கத்திடம் நஷ்ட ஈடு கோரியுள்ளன.

கீரோ ஹொண்டா, பெப்சி, எல்.ஜி போன்ற அனுசரணைக் கம்பனிகளே நஷ்டஈடு கோரிப் போர்க் கொடி தூக்கியுள்ளன.

போட்டிகளின் போது அனுசரணைக் கம்பனிகளின் பெயர் பொறிக் கப்பட்ட ரீசேட்டுக்கள் அணிந்து, துடுப்பாட்ட மட்டையில் கம்பனியின் இலச்சினையைப் பதிப்பது, விளம் பரங்களில் நடிப்பது போன்றவற்றில் இந்திய வீரர்கள் ஈடுபடுவதற்குப் போட்டி அமைப்புக் குழு தடை விதி த்திருந்தமை தெரிந்ததே.

எனினும் இவர்களை வைத்து விளம்பரம் செய்து பெருமளவு இலாபம் ஈட்டிக் கொள்ள நினைத்த கம்பனிகள் இதனால் பெரும் வருவாய் இழப்பைச் சந்தித்துள்ளன.

அனுசரணைக் கம்பனிகள் நஷ்ட ஈடு கோரியுள்ள தகவலை உலக கிரிக்கெட் சமூகமும் உறுதி செய்துள்ளது. அதன் இயக்குனர் இயன் பிரைபெர்க் கூறுகையில், சில அனுசரணைக் கம்பனிகள் சர்வதேச கிரிக்கெட் சங்கத்திடம் நஷ்டஈடு கோரியுள்ளன. அவர்களின் கோரிக்கை இன்றும் பரிசீலனையில் உள்ளது என்றார்.




# ஜடேஜாவுக்கு நீதிமன்று அழைப்பு!

கிரிக்கெட் வீரர் ஜடேஜா மீது விதிக்கப்பட்ட 05 ஆண்டு தடையை விலக்கியதற்கு எதிர்ப்புத் தெரிவித்து டில்லி உயர் நீதிமன்றத்தில் இந்திய கிரிக்கெட் சபை தாக்கல் செய்த மனுவை நேற்று முன்தினம் விசாரித்த நீதிபதி இதற்கு விளக்கம் கோரி ஜடேஜாவுக்கு நோட்டீஸ் அனுப்ப உத்தரவிட்டுள்ளார்.

கிரிக்கெட் சூதாட்டக் குற்றச்சாட்டிற்கு ஆளான ஜடேஜா சர்வதேசப் போட்டிகளில் 05 ஆண்டுகளுக்குப் பங்கேற்கக் கூடாது என இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை தடைவிதித்தது.

இதை எதிர்த்து ஜடேஜா டில்லி உயர் நீதி மன்றத்தில் வழக்குத் தொடர்ந்த நிலையில் நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்ட மத்தியஸ்தர் ஜடேஜா மீதான தடையை விலக்க கடந்த சனவரி மாதம் உத்தரவிட்டார்.

இந்நிலையில் தடை உத்தரவை விலக்கியதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை சார்பில் டில்லி உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த மனுவை நேற்று முன்தினம் விசாரித்த நீதிபதி தி.மன்மோகன் இது குறித்து விளக்கம் கேட்டு ஜடேஜா மற்றும் இந்திய கிரிக்கெட்சபை உறுப்பினர் ஒழுங்கு நடவடிக்கைக் குழுவினர் மீது நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது.

# கிளி.யை நவீன நகரமாக்கும் செயற்பாடுகள் நேற்று ஆரம்பம்

## - வீதியினை அகலமாக்கும் பணி தொடங்கியது

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சியை நவீன நகரமாக மாற்றுவதற்கான செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதற்கான முதல் நடவடிக்கையாக நகர வீதியினை அகலமாக்கும் நடவடிக்கைகள் நேற்று விவேகானந்தபுரம், பாரதிபுரம் கிராமத்திற்கிடையில் ஏ-9 பிரதான வீதியிலிருந்து ஆரம்பித்து வைக்கப்பட்டது.

கிளி. கரைச்சிப் பிரதேசச் செயலர், கிளிநொச்சி காவல் பணிமனைப் பொறுப்பதிகாரி ரஞ்சித் குமார், கிருஸ்ணபுரம் கிராம சேவை அலுவலர் குணசிங்கம் ஆகியோர் மேற்படி வீதிகளை அகலமாக்கும் பணியினை ஆரம்பித்து வைத்தனர்.

மேற்படி திட்டத்தினை ஆரம்பித்து வைத்து கரைச்சி பிரதேச செயலர் பொன். நித்தியானந்தன் உரை நிகழ்த்துகையில்;

கொடிய யுத்தத்தினால் சீரழிக்கப்பட்ட கிளிநொச்சி மீளவும் புனரமைக்கப்பட்டு வருவதனை சகலரும் அறிவீர்கள். இச்சந்தர்ப்பத்தில் கிளிநொச்சியை நவீன நகரமாக மாற்றுவதற்கான செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன.

அம்பாள்குளத்தில் புதிய கிளிநொச்சி நகரத்தின் நவீன வசதிகளுடனான பாரிய சந்தை மையமாக அமைக்கப்படவுள்ளது.

இதனால் இக்கிராமத்தை அண்டிய கிராமங்களாகிய விவேகானந்த நகர், பாரதிபுரம், மலையாளபுரம், கிருஸ்ணபுரம், பொன்னகர் ஆகிய கிராமங்கள் உபநகரமாக மாறக்கூடிய சாத்தியக்கூறுகள் அமைந்துள்ளமையினால் இச் செயற்பாடுகளின் முதற்கட்டமாக வீதிகளை அகலமாக்குவது தவிர்க்கமுடியாத தொன்றாகியுள்ளது. இதனால் பாரதிபுரம் மத்திய வீதி யாழ் சாலைக்கு (ஏ-9) சமாந்தரமாகவும், அகலமுடையதாகவும் மாற்ற வேண்டியது மிக அவசியமானதாகும். எனவே காணி உரிமையாளர்கள் வீதிக்குத் தேவையான காணிகளை அதாவது வீதியின் மத்தியிலிருந்து 35' தேறக் கூடிய வகையில் விட்டுக்கொடுத்து தங்கள் கிராமம் ஒரு நகரமாக மாறுவதற்கு தங்களாலான பங்களிப்பினைத் தவறாது நல்க வேண்டும் என வேண்டிக்கொண்டார். (சோ)

# உரிய அனுமதியின்றி நடத்தப்பட்ட சிறுவர் இல்லம் இடைநிறுத்தம்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சிப் பகுதியில் தனிநபரொருவரால் உரிய அனுமதியின்றி நடாத்தப்பட்டு வந்த சிறுவர் இல்லம் ஒன்று இனங்காணப்பட்டு இடை நிறுத்தப்பட்டது.

கடந்த ஒரு மாத காலமாக கிளிநொச்சி கனகபுரம் பகுதியில் உள்ள ஆலய வளவில், இந்தியாவிலிருந்து நாடு திரும்பிய கனகபுரத்தைச் சேர்ந்த நபரொருவரால் "ஆனந்தம் இல்லம்" என்ற பெயரில் சிறுவர் இல்லம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டு, செயற்படுத்தப்பட்டு வந்தது. இந்நிலையத்தில் 12 வயதிற்கும் 16 வயதிற்கும் இடைப்பட்ட நூறு வரையான சிறுவர் சிறுமியர் கல்வி கற்று வந்தனர்.

தமிழீழத்தில் உள்ள எந்தவொரு நிர்வாகத்தினதும் அனுமதியைப் பெறாமலும், சிறுவர் பாதுகாப்பிற்கான நிலையான சட்டதிட்டங்கள் எதுவுமின்றியும் இயங்கிய இந் நிலையத்தின் செயற்பாடுகள் கிளிநொச்சி காவல்துறையினரின் கவனத்தை ஈர்த்தது.

உடன் இவ்விடயம் தொடர்பான அரச, அரச சார்பற்ற நிறுவனங்களுடன் தொடர்பு கொண்ட காவல் துறையினர், தேவையான தரவுகளைப் பெற்றுக் கொண்டு பூர்வாங்க விசாரணைகளை மேற்கொண்ட போது சிறுவர் பாதுகாப்பிற்கான ஏற்பாடுகள் எதுவும் இந்நிறுவனத்தில் காணப்படாத நிலையைக் கண்டறிந்தனர். இது விடயமாக உடனடியாக கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் சிறுவர் பாதுகாப்புத் தொடர்பான மனுவொன்றை கிளிநொச்சி காவல்துறையினர் சமர்ப்பித்தனர்.

இம்மனுவை நேற்று முன்தினம் விசாரணை செய்த கிளிநொச்சி மாவட்ட நீதிமன்ற நீதியாளர், குறித்த சிறுவர் கல்வி நிலையத்தின் செயற்பாடுகளை இடைநிறுத்தியதுடன், சிறுவர்களின் பாதுகாப்பையும், உரிமைகளையும் கருத்தில் கொண்டு உரிய அனுமதிகளைப் பெற்றுக் கொண்டே சிறுவர் கல்வி விடயத்தில் வேலைத்திட்டங்களை மேற்கொள்ளலாம் எனவும் கட்டளை வழங்கியுள்ளார். (பா)

# ஐ.தே.க. அரசைக் கவிழ்த்து விரைவில் புதிய அரசொன்றை அமைப்போம்

## - பொ.ஐ.மு. பேச்சாளர் சரத்அமுனுகம தெரிவிப்பு

மிக விரைவில் ஐக்கிய தேசிய கட்சி அரசைக் கவிழ்த்து புதிய அரசு ஒன்றை ஏற்படுத்தப்போவதாக பொ.ஐ.மு.பேச்சாளர் சரத்அமுனுகம தெரிவித்துள்ளார்.

புதிய அரசு அமைக்கப்பட்டவுடன் அதன் முதற்பணியாக ஊழல்களை செய்த அமைச்சர்கள் நீதிமன்றத்தின் முன்னால் நிறுத்தப்பட்டு தண்டனை வழங்கப்படும். அதற்கு ஏதுவாக இவர்கள் நாட்டிலிருந்து தப்பியோட முடியாமல் இருக்குமாறு விமான நிலையம் மூன்று நாட்களுக்கு மூடப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

அண்மையில் நிகழ்வொன்றில் உரையாற்றும்போது அவர் இதனைத தெரிவித்துள்ளார்.

புதிய அரசு நியமிக்கப்பட்டவுடன் நாட்டின் அபிவிருத்திக்கும் கலாசார மேம்பாட்டிற்குமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# முல்லை. தபாலகம் இன்றுமுதல் முல்லை. நகரில் இயங்கும்

## - ஒட்டுசுட்டானிலும் வெள்ளிமுதல் தபாலகம்

(அலுவலக செய்தியாளர்)

முல்லைத்தீவுத் தபாலகம் இன்று முதல் சொந்த இடத்தில் இயங்கவுள்ளது.

இராணுவ நடவடிக்கை மூலம் இடம்பெயர்ந்து புதுக்குடியிருப்பில் இயங்கிவந்த முல்லைத்தீவுத் தபாலகம் இன்றுமுதல் சொந்த இடத்தில் இயங்கவுள்ளது எனவும் கடந்த 12ஆம் திகதி முதல் முல்லைத்தீவில் இத்தபாலகம் இயங்குவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும் தவிர்க்க முடியாத காரணங்களால் குறிப்பிட்ட தினம் முதல் இயங்கவில்லை எனவும் அஞ்சல் திணைக்களப் பதிவாளர் இராமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு தபாலகத்துடன் இயங்கிவந்த ஒட்டுசுட்டான் தபாலகம் எதிர்வரும் வெள்ளிமுதல் ஒட்டுசுட்டானில் இயங்கவுள்ளது. இத்தபாலகத்திற்கு எவரும் தபாலதிபராக நியமிக்கப்படாத நிலையில் இதுவரைகாலமும் இயங்கவில்லை. தற்போது மாங்குளம் தபாலகத்தில் கடமை புரிந்த செ.சிவபாதசுந்தரம் ஒட்டுசுட்டான் தபாலகத்தில் தபாலதிபராகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (பா)

# -வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட- தென்பகுதி மக்களுக்கு முல்லையிலும் பொருட்கள் சேகரிப்பு

(ஒட்டுசுட்டான்)

தென்னிலங்கையில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மாவட்ட ரீதியாக முல்லை. மாவட்டத்திலும் உடை, உணவு, நிதி, ஆகியன சேகரிக்கப்படுகின்றது.

இச்சேகரிப்பானது தேசிய எழுச்சிப் பேரவையின் செயலாளர்களுக்கூடாக நிதி, உணவு, உடை என்பன கிராமங்கள் தோறும் சென்று சேகரிக்கப்பட்டுள்ளது.

இச்சேகரிப்பானது நேற்று ஆரம்பமாகி இன்றும் நடைபெறுகின்றது. (05)



வெள்ளத்தால் இடம்பெயர்ந்த இரத்தினபுரி மக்கள்

# மீட்டல்வகுப்பு

(அலுவலக செய்தியாளர்)

முல்லைத்தீவு பிரதேச நிலையத்தில் கல்விமாணிப்பட்டக்கற்கை நெறியினை தொடரும் ஆசிரிய மாணவர்களுக்கான முதலாம் வருடப் பரீட்சை மீட்டல் வகுப்புக்கள் எதிர்வரும் 24ஆம் திகதிகளில் நடைபெறுமெனவும் இக் கற்கை நெறியினைத் தொடரும் சகல ஆசிரிய மாணவர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறும் சிரேஷ்ட விரிவுரையாளர் ச.நாகரத்தினம் தெரிவித்துள்ளார். (பா)

# முல்லை. வலயப் பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம்

(அலுவலக செய்தியாளர்)

முல்லைத்தீவு கல்விவலயத்திற்குட்பட்ட பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் நாளை காலை ஒன்பது மணிக்கு முல்லைத்தீவு கல்விவள நிலையத்தில் நடைபெறவுள்ளது. மேற்படி கூட்டத்தில் பாடசாலை இரண்டாம் தவணைக்கான செயற்பாடுகள் பற்றிய அறிவித்தல்களும் பாடசாலை செல்லாத பிள்ளைகளை இனங்காணுதல் புதிய ஆசிரியர் நியமனம், தரஉள்ளீடுகள் என்பன பற்றி கலந்துரையாடப்படவுள்ளது. அத்துடன் பாடசாலைமட்டத் தமிழ்த்தினப் போட்டி யூன் 12ஆம் திகதி வரை பிற்போடப்பட்டுள்ளது. எனவும் தங்கள் பாடசாலைகளில் தமிழ்த் தினப் போட்டி நடைபெறுவதற்கான திட்டநடைமுறைகளையும் மெல்லக் கற்கும் மாணவர்கள் தொடக்கப்பிரிவு க.பொ.த.(சா/த.) 1998முதல் 2002 வரையான பெறுபேறுகள் திரட்டுவதற்காக வழங்கப்பட்ட படிவங்களை பூரணப்படுத்தியும் ஜீ.ரி.சற்.நிறுவனத்தின் மூலம் 5 வரை தமிழ் கணிதம் ஆகிய பாடங்களில் மாணவர்களின் தேர்ச்சி மட்டம் பற்றி வகுப்பாசிரியர் ஊடாக விபரங்களையும் பெற்றுக் கொண்டு வருமாறும் முல்லைத்தீவு வலயக் கல்விப்பணிப்பாளர் த.குருகுலராசா தெரிவித்துள்ளார். (பா)

## ராணுவத்தின்...

பேருந்து நடத்துனரான புங்குடுதீவு 3ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த சின்னத்துரை சிவலிங்கம் (வயது 25) என்பவரும் பயணியான புங்குடுதீவு 7ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த தியாகு மயூரன் ஆகிய இருவருமே உயிரிழந்துள்ளனர். அத்துடன் 10 பயணிகள் படுகாயமடைந்த நிலையில் யாழ் போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (27)

## குடும்பஸ்தர்....

அ.விக்னேஸ்வரன் (வயது 21) ஜீவநகர் முத்துஐயன்கட்டு என்பவரே இவ்வாறு காயமடைந்தவராவார். (05)

## வர்த்தமானி...

அரச வர்த்தமானியில் வெளியிடப்படவில்லை. இந்த விவகாரம் குறித்து சனாதிபதிக்கும் ஆளும் ஐ.தே.முன்னணிக்குமிடையில் ஏற்பட்டு வரும் இழுபறி நிலையினால் மேலும் சிக்கல்கள் ஏற்பட்டு வருகின்றன.

## புலிகளின்..

உட்பட பலவாறான மருத்துவ சேவையை கடந்த காலங்களில் இவ் மருத்துவ சேவையினர் வழங்கியதுடன் மக்கள் மத்தியில் சுகாதாரம், நோய்த்தடுப்பு தொடர்பான விழிப்புணர்வு நடவடிக்கைகளிலும் இம்மருத்துவ சேவையினர் ஈடுபட்டு வருகின்றனர்.

## கிளியில் நாளை...

அரசு மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகள் என்ன என்பது பற்றி விடுதலைப்புலிகள் நோர்வே ஊடாக தெரிவித்திருந்த ஆலோசனைக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க புலிகளுக்கு அனுப்பிவைத்திருந்த கடிதத்திற்கான பதில் இம்மாநாட்டில் அறிவிக்கப்படலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

## தெற்கில்..

உயர்வடைந்துள்ளது.

பல பகுதிகள் வெள்ளத்தினால் சூழப்பட்டுள்ளது. ஐநூறிற்கும் மேற்பட்டோர் காணாமல் போயுள்ளதால் உயிரிழப்பு மேலும் அதிகரிக்கலாம் என்று அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

போக்குவரத்துக்கள், மின்சார விநியோகம் என்பன தொடர்ந்து பாதிப்பிற்குள்ளாகியுள்ளன. மக்கள் சுத்தமான குடிநீர் பெற்றுக்கொள்ள முடியாது அவதிப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## புலிகள்-தமிழ்..

பணிப்பாளர் புலித்தேவன் ஆகியோர் சந்தித்து உரையாடினர்.

இச்சந்திப்புத் தொடர்பாக இரா. சம்பந்தன் கருத்து தெரிவிக்கையிலேயே, டோக்கியோ மாநாட்டில் விடுதலைப்புலிகள் கலந்து கொள்வது தொடர்பாக மிகவும் ஆழமாக ஆராயப்பட்டது எனத் தெரிவித்தார். ஆனால் இச்சந்திப்புக் குறித்து மேலதிக விபரம் எதையும் அவர் வெளியிட மறுத்துவிட்டார்.

இதேவேளை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் ஆகியோரைச் சந்தித்து விடுதலைப் புலிகளை டோக்கியோ மாநாட்டில் கலந்துகொள்ளச் செய்வது தொடர்பாக கலந்துரையாடியுள்ளோம். இவ்விடயம் தொடர்பாக அரசிடமும் நோர்வே பிரதிநிதிகளுடனும் வெளி உலகுடனும் தொடர்ந்து நாம் வலியுறுத்துவோம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (லோ)

# - வடக்கு - கிழக்குப் பகுதியில் - உள்ளூராட்சிச் சபைத்தேர்தல் ஆராய கொழும்பில் மாநாடு

வடக்கு கிழக்கு மாகாண உள்ளூராட்சி மன்றங்களின் தேர்தல் தொடர்பாக ஆராய்வதற்காக யாழ்.மாவட்டத்திலுள்ள உள்ளூராட்சி மன்றங்களின் செயலாளர்கள் கொழும்பிற்கு அழைக்கப்பட்டுள்ளார்கள்.

இந்த விடயம் தொடர்பாக நாளை மறுதினம் கொழும்பில் விசேட கலந்துரையாடலொன்று இடம்பெறவுள்ளது.

வடக்கு கிழக்கு மாகாண உள்ளூராட்சி மன்றங்களிற்கான தேர்தல் அடுத்தமாதம் 23ஆம் திகதி நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருந்தது தெரிந்ததே.

## புலிகளின் பதில்...

பேச்சுக்கான பதில் கடிதமாக அமையும் எனத் தெரியவருகின்றது.

இக்கடிதத்தினை அரசியல் ஆலோசகரும் புலிகளின் முதன்மைப் பேச்சாளருமான அன்ரன் பாலசிங்கம் அவர்கள் அரசாங்கத்திற்கு அனுப்பி வைப்பார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

## வலி-வடக்கு...

கேட்டா வடக்கில் சிங்களப் படைகளை குடியமர்த்தினாய்" போன்ற சுலோகங்களைத் தாங்கி நின்றனர்.

மறியல் போராட்டத்தின் முடிவில் ஒன்றிய செயலாளர் சாம்பசிவம் சிறிலங்காப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கான மகஜரை யாழ். மாவட்ட அரசாங்க அதிபரிடம் கையளித்தார். (27)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு மே மாதம் 21ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.